திராவிடநாடு

8—2—59 | வார வெளியீடு | விலை 16 காசு

நான் கண்டது!

[டிட்டோ]

பாரெங்கும் பறந்தோடிக் கையை நீட்டிப்
பல்லிளித்து உமதமைச்சர் பெற்ற பிச்சை
நேர்உங்கள் வடநாடு செழிப்ப தற்கே
நீட்டுகிறீர்! ஆலைகளும் அணையும் மிக்கு
சீரெங்கும் கண்டேன் நான்! ஆனால் காந்தி
சிறுவேட்டி கட்டுதற்குத் தாண்டி விட்ட
பேரெங்கு? தென்னாட்டில் வடக்கைப் போல
பெருந்திட்டம் காணேன் நான்! கண்ட தென்ன?

சிலைகண்டேன்! மெய்சிலிர்த்தேன்!! சிற்பம் தம்மில்
சீவனிலாக் குறைதவிர வேறு காணேன்!
கலைகண்டேன்; களிகொண்டேன்; சரிதம் கூறும்
கவின்காட்சி பலகண்டேன்! அவற்றிற் கீடாய்,
விலைகண்டேன் அல்லேன்நான்! ஆனால் அந்தோ
வடக்கினிலும் மிகத்தாழ்ந்த பொருளா தார
நிலைகண்டேன்! நெஞ்சுலர்ந்தேன்! பெருந்திட் டங்கள்
வடக்கைப்போல காட்டவில்லை. இருந்தால் தானே!!

நுரைமட்டும் தென்னாட்டார் நுகரப், பாலின்
நலமெல்லாம் வடவர்க்கே ஆக்கித் தந்தீர்!
முறைகெட்ட ஆட்சியினை நடத்து கின்றீர்!
முகந்தூக்கிப் பாரெங்கும் பஞ்ச சீலம்
பறைகொட்டி வருகின்றீர்— வேடம் போட்டீர்!
பாராள்வோர் ‘தராசைப்போல’ ஆள வேண்டும்!
கரைகாட்டிக் கொடியவராய் சரிதம் உம்மைக்
காட்டிடுமுன் தப்பிடுவீர்— தரணி தனில்!

கவிராஜ் இராமசாமி சௌத்ரீ என்பார், தெலுங்கு நாட்டிலே, சிந்தையைக் கிளறிவிட்ட பெரியார். இங்கே எப்படி, சுயமரியாதைக்காரர்கள், வைதீகத்தையும் பார்ப்பனியத்தையும் கண்டிக்கத் துவங்கினரோ; அதேபோல, அங்கும் கிண்டலும் கேலியும் செய்யத் துவங்கிய கவியரசர் அவர். அவர் உயிரோடிருந்தபோது, எவரெவர் தூற்றினரோ, அவர்கள் எல்லாரும் இன்றைய தினம் அவரது பெருமையை உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். மேல் சாதி கீழ் சாதி, உயர்ந்தவன் தாழ்ந்தவன், என்றெல்லாம் பேசப்படுவதை எதிர்த்துப் போர் முழக்கம் செய்தவர் அவர். இப்போது, அவைகளைப் பற்றிப் பேசுவது எளிது! கக்கன் கூடக் கர்ச்சிக்க முடியும்!! ஆனால், பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பென்றால், சனாதனிகள் சபிப்பர்; வைதீகர்கள் வம்புக்கிழுப்பர்; வாலிபர்களில் பலரும் வசைமொழிவர்; குறும்பர்கள் கோலெடுத்து வருவர்; வசதி படைத்தவர்கள் ஆட்களை ஏவுவர். ஒரு கூட்டத்தை நடத்திவிட்டு வருவதென்றால், இவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்தபின் தான் முடியும்! அதிலும், ஆயிரமாயிரம் காலமாக, மக்கள் மனதிலே ஊறிப்போன சாஸ்திர சம்பிரதாயங்களையும், புராணக் கருத்துக்களையும் பகுத்தறிவுக்கொவ்வாத பல சேதிகளையும் எடுத்துச்சொல்ல முற்படும்போது தக்க ஆதாரங்களையும், தகுதியான சான்றுகளையும் சொல்லவேண்டுமன்றோ? இப்போது நாம் எளிதில் 'வழிகாட்டிகள்' தீட்டிய நூல்களையும் விளக்கங்களையும் வைத்துக்கொண்டு வாதாடக் கிளம்பலாம்! அப்போது!! யார், இவைகளைக் கண்டிக்கக் கிளம்பினரோ, அவர்களே ஆதாரங்களையும் சான்றுகளையும் தேடியெடுக்கவேண்டியிருந்தது. கவிராஜ், சாஸ்திரங்களைக் கற்றார்; புராணங்களைப் பயின்றார்; கீதையை மனனம் செய்தார். அவைகளிலுள்ள கருத்துக்களையே தேடியெடுத்து, அவைகள் மூலமே, முரண்பாடுகளையும் தேவையில்லாதனவைகளையும் எடுத்துச்சொல்லலானார்! "எவனய்யா சூத்திரன்? ஏன் அவன் சூத்திரன்?" என்று தமிழகத்தில் பெரியார் கேட்டது போல, ஆந்திரத்தில் கேட்டவர் கவிராஜ்! 'சூத்திர புராணம்' என்கிற நூலை எழுதினார்!!

சும்மா விடுவார்களா, வைதீகர்கள்? சூ சூ என்றனர்! கண்டித்தனர்! ஏசினர்! தூற்றினர்! எங்கும்

"கேட்டு வந்தோன்"

எதிர்ப்புக் கிளம்பிற்று! அந்த எதிர்ப்புகளைக் கண்டு கவிராஜ் மருளவில்லை. அதுதானே, அறிவியக்கத்தின் சரிதத்தில் ஏற்படுவதில்லை! எதிர்ப்புக் கிளம்பக் கிளம்ப, உற்சாகம் அதிகமாயிற்று அவருக்கு. எதிர்த்தவர்களைக் கண்டிக்க, வரிந்துகட்டிக்கொண்டு கிளம்பவில்லை; வசைபாடவில்லை; சமுத்திரத்தில் உருட்டிவிடுவேன் எனச் சங்கநாதம் செய்யவில்லை. மாறாக, கிண்டல்செய்தார்! பழைய புராணங்களிலுள்ள விநோதங்களை எடுத்துச் சொல்லிக் கிண்டல் செய்யலானார், சொல்லச்சொல்லச் சிரித்தனர்! பிறகு சிந்திக்கவும் தொடங்கினர், வைதீகர்களைச் சமாளிப்பதில், நகைச்சுவை கலந்த கேலியினைவிடச் சரியான ஆயுதம் எது? அதைப் பயன்படுத்தினார் கவிராஜ்!

அந்த மேதையினுடைய ஆண்டு விழாவை முன்னிட்டு, சென்ற கிழமை, தெனலிக்கு சி. என். ஏ. சென்றிருந்தார். அவர் கூட காஞ்சி சி. வி. இராசகோபால், இரா. தர்மலிங்கம் எம். பி., கே. இராசாராம், எதிராசு முதலிய கழகத் தோழர்களும் போயிருந்தனர். "சி. என். ஏ. தெனலி வருகிறார்!" என்கிற சேதியை விளம்பரங்கள் மூலம் கண்ட அங்குள்ள பிராமண சபையினர் என்போர், ஒரு வாரத்துக்கு முன்னதாகத் தாங்கள் நடாத்திய மாநாடொன்றில், கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கின்றனர். என்ன பேசியிருப்பார்கள் என்று யூகிக்கவா வேண்டும்? நாத்திகன் வருகிறான், இராட்சசன் வருகிறான், நாட்டைத் துண்டு போடுகிறவன் வருகிறான், பொதுமக்களே போகாதீர்கள், இப்படி இங்கு 'பயமுறுத்துகின்றனரல்லவா' பழைமை விரும்பிகள், இதே குரலை, அங்கும் எழுப்பியிருக்கின்றனர்!!

கவிராஜ் விழாவில், பேசும்போது, இதைப்பற்றி சி. என். ஏ. குறிப்பிட்டார்:— "ராக்ஷசன் வரப்போகிறான் என்று, நான் இங்கே வருவதைப்பற்றி, யாரோ சிலர் குறிப்பிட்டார்களாம்! இதோ வந்திருக்கிறேன், என்னைப்பார்த்து, நான் ராக்ஷசனா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். ராக்ஷசன் என்று புராணங்களிலே கூறப்படுகிறவர்கள், என்னைப போல இருந்தார்கள் என்றால், தேவர்களை ராக்ஷசர்கள் கொடுமைப் படுத்தினார்கள் என்பதை, யாரும் நம்பமாட்டார்கள். சாமானியனை என்னைக் கண்டு சனாதனிகள் அஞ்சத் தேவையில்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

மனமிரங்காதா!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [8-2-59] தனிப் பிரதி 13-காசு [இதழ் 30

அறிவித்துவிட்டார்கள்! ஐயோ, அக்கிரமம், இழந்தோம், எல்லாம் போயிற்று, நாசம், எப்படி வாழ்வோம், என்றெல்லாம் கூக்குரலிடும் கும்பி கொதித்தவர்களுக்கு உதவியேதும் தரப்போவதில்லையாம்;— இலங்கை அரசினர் அறிவித்துவிட்டார்கள்!!

வெறிப்போர், அங்கு விளைவித்த வேதனைகளை உலகம் அறியும். அக்கிரமக்காரர்களின், குறிக்கு இலக்காகிப் பலியானோர், தமிழர்கள் என்பதையும் சொல்லுகிறார்கள். கடைகளை இழந்தனர்! வீடுகளைத் திக்குத் தத்தம் செய்தனர்! வீதிக்கு விரட்டப்பட்டனர்! நாதியற்றவர்களாயினர்!—அவர்களது, தவிக்கும் குடும்பங்களுக்கு ஏதாவது உதவி தரப்படும் என்று எதிர்பார்த்தோம். இதோ, அதற்கென அமைக்கப்பட்ட இலங்கை அமைச்சர் குழு, "இல்லை! கிடையாது! தரப்படமாட்டாது எந்த நஷ்ட ஈடும்", என்று அறிவித்துவிட்டது.

அவலக்குரலை அவமதிக்கும் அரசு அங்கே இருக்கிறது என்றால், எந்தக் குரலையும் காதில் வாங்கிக்கொள்ளாத அரசினை, இங்கே நாம் பெற்றிருக்கிறோம். சென்னைக் கோட்டையிலே சிங்காரமாகக் கொலுவீற்றிருக்கும் அமைச்சர்கள், இலங்கையிலே தமிழர்களுக்கிழைக்கப்படும் அநீதி குறித்து, எடுத்துச் சொல்ல அஞ்சுகிறார்கள்! டில்லியிலுள்ள பெரியவர்களோ, எலிசபத் ராணியின் கணவரை வரவேற்கவும் அவருக்கு வரிசைகள் வழங்கவும் மும்முரமாயுள்ளனரே ஒழிய, இந்தச் சோகக்குரலை மதிக்கவில்லை!!

'இந்து' எழுதுகிறது. "அங்கே நடைபெற்ற கலவரங்களில் மோசமான வகைகளில் பாதிக்கப்பட்டவர்கள், இலங்கைத் தமிழர்களும், இங்கிருந்து போயுள்ள தமிழர்களும் ஆவார்கள். அவர்களுக்கெல்லாம் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்கவேண்டியதில்லையென மந்திரிசபைக்கமிட்டி செய்துள்ள முடிவு தமிழ்பேசும் சிறுபான்மையினரின் உள்ளத்தில் கசப்பை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை, சர்க்காரால் தங்களுக்கு நீதியும் நேர்மையும் கிட்டும் என்கிற நம்பிக்கையை இழந்த நிலையிலுள்ள அவர்களுக்கு, நிச்சயம் இந்த முடிவு, விரக்திதரும்", என்பதாக.

'நம்ம' சர்க்கார், இதனை எடுத்து, டில்லிக்குச் சொல்லி, இலங்கையுடன் பேசச் செய்யக்கூடாதா! தன் மதிப்பில்லாவிடினும், 'நம்ம' மந்திரிகளுக்கு சாதாரணமாக உண்டாகக்கூடிய ஈவிரக்கம்கூட ஏற்படவில்லையா! நேர்மையில்லாத அரசின் கையில் அகப்பட்டுத் தவிப்பதுதானா இலங்கைவாழ் தமிழர்க்கு நாம் காட்டப்போகும் அன்பு!

இலங்கைப் பிரதமர் எங்கள் நேருவின் அருமை நண்பர் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அந்த நண்பரின் நடவடிக்கைகள் பண்டிதருக்குப் பஞ்சாமிர்தமாகவா இருக்கிறது? ஏன் இவர் எதுவும் கேட்கவில்லை? அவர் கேட்காமலிருந்தாலும் இங்குள்ள மந்திரிகள், தூண்டக்கூடாதா—ஒடித் தெண்டனிட்டாவது, ஒரு முடிவு காணச் சொல்லக் கூடாதா!!

இலங்கைவாழ் தமிழர்கள் இரத்தக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும்போது, இங்குள்ள அமைச்சர்கள் வாளாவிருப்பது, அன்புமல்ல அறமும் ஆகாது. உறக்கம் விழித்து, இலங்கைவாழ் தமிழர்களுக்கு உறுதியும் தெம்பும் ஏற்படும் வகையில், ஏதாவது செய்யவேண்டும் காமராஜர் சர்க்கார். 'ஆகட்டும் பார்க்கலாம்' என்றிருப்பது இந்த விஷயத்திலும் கூடாது. அங்கே தவிக்கிறார்கள் தமிழர்கள்! கண்ணீரைக் கண்டும், 'கம்'மென்றிருப்பது காட்டரசுகளின் குணமாகும்—குடியரசு விழா, இப்போதுதான் கொண்டாடியிருக்கிறார்கள்—சுதந்திரம் பெற்ற பூமி என்று உலகத்தையெல்லாம் பார்த்துச் சொல்லுகிறார்கள் — அவர்களுக்கு இது அழகல்ல!! ஆவன செய்ய வேண்டுகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்களைப்போல, என் மனதில் பட்ட கருத்துக்களை, தமிழ்நாட்டிலும் சரி, ஆந்திரத்திலும் சரி, எடுத்துச்சொல்ல எனக்கும் உரிமையுண்டு. எங்கே நம்முடைய இடம் போய்விடுமோ, நாம சொல்வதெல்லாம் பொய்மென்று புரிந்துபோய் விடுமோ என்கிற சந்தேகமும் அச்சமும் அவர்களுக்கு இல்லையென்றால், என்னைக்கண்டு இப்படி அஞ்சிக் கூச்சலிடவேண்டிய அவசியமில்லை. ஒன்று மட்டும் அவர்களுக்கு நான சொல்லிக்கொள்வேன்—தயவு செய்து மறந்துவிடவேண்டாம், நூற்று எட்டு சிவாலயங்கள், பதினெட்டு வைணவாலயங்கள் எல்லாம் நிரம்பியதும்; பக்தர்கள் போற்றித் துதிக்கும் க்ஷேத்திரமுமான காஞ்சிபுரத்திலிருந்துதான் நான் வந்திருக்கிறேன். மகிமையும் பெருமையும் பொருந்திய அந்த ஊரிலிருக்கும் நானே இப்படி மாறியிருக்கிறேன் என்றால், அதற்குள்ள காரணம் என்னவென்பதைப் பக்தர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.''

விழாவில், கரமுழக்கம் பிளந்தது! உண்மைதானே? எந்த ஊரில்தான் கோயில் இல்லாமலிருக்கிறது, கொட்டு முழக்குக் கேட்காமலிருக்கிறது? அப்படியிருந்தும் ஊருக்கு ஊர் பகுத்தறிவு வாதிகள், ஒவ்வொரு நாளும், அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள் என்றால் என்ன பொருள்? எப்படி, இங்குள்ளோரிடம் பிற்போக்குவாதிகள் நம்மைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லித் தோல்வி காண்கின்றனரோ, இதே தோல்வி, ஆந்திரத்திலும் பெற்றனர் என்பதை. அங்கு வந்திருந்த மக்கள் கூட்டம் சொல்லிற்று! அப்பப்ப, என்ன மரியாதை! எவ்வளவு மலர் மாலைகள்! அன்புரைகள்!

பார்ப்பனர்கள் சம்பந்தமாக நம்மைப்பற்றி எவ்வளவு தப்பெண்ணம் பரப்பப்பட்டிருக்கிறது அங்கு என்பதும், பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் விளங்கிற்று. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிய நல்ல சேதிகள் நாலுபக்கமும் போகாவிடினும், தவறான கருத்துக்களை மட்டும் பரப்புவதில் பழைமை விரும்பிகள் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள்! தெனாலியிலுள்ள 'பத்திரிகையாளர்கள் சங்கத்தின்' சார்பில், தேநீர் விருந்தொன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். 'இந்து' இதழினைச் சேர்ந்த நரசிம்மன் அவர்களையும், தனி விருந்தினராக, இந்தக் கூட்டத்துக்கு அழைத்து இருந்தார்கள். இந்து இதழின் நரசிம்மன், பொறுப்பான இடத்திலிருப்பவர்! பெயரைக் கேள்விப்படும்போது வயதானவரோ என்று கருதத் தோன்றும், ஆனால் சி. என். ஏ. கல்லூரியில் படித்த காலத்தில் தானும் படித்தவர் என்பதை, அவர் விளக்கினார். இந்தக் கூட்டத்தில் சி. என். ஏ.யும் பேசினார். பேசினார் என்பதைவிட, இருட்டடிப்பு செய்யும் ஏடுகளைக் கண் முன் நிறுத்தினார் என்பது பொருந்தும்! 'இந்து' ஏட்டையும் விடவில்லை!! எப்படி இவைகள் ஆளவந்தார்களுக்குத் துதிபாடுகின்றன, வளரும் கொள்கைகளை இருட்டடிப்புச் செய்கின்றன, இது ஜனநாயகத்துக்கு எவ்வளவு கேடு செய்வதாகும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்.

இந்தப் பேச்சு முடிந்ததும், ''சில கேள்விகள் கேட்பார்கள். நீங்கள் பதில் சொல்ல வேண்டுகிறேன்'' என்று கேட்டுக்கொண்டார் சங்கத் தலைவர். வந்திருந்தவர்கள், சி.என்.ஏ.யிடம், ரசமான கேள்விகள் எல்லாம் கேட்டனர். உண்மையில் நல்லதொரு கருத்துவிளக்க அரங்கமாக விளங்கிற்று. ஒரு இளைஞர் கேள்வியை ஆரம்பித்துவைத்தார்.

கேள்வி:- தி. மு. க. என்றால் என்ன? அதன் கொள்கை யாது?

சி. என். ஏ:- திராவிட கழகத்திலிருந்து ஏற்பட்ட, ஜனநாயக ரீதியான ஒரு அமைப்பு, திராவிட முன்னேற்றக் கழகம். திராவிடநாடு பெறவேண்டுமென்பது, அதன் இலட்சியம்.

கேள்வி:- திராவிட கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் என்ன வித்தியாசம்?

சி. என். ஏ:- 'ஜனநாயக ரீதியான' என்கிற வார்த்தையைப் பயன்

(16-ம் பக்கம் பார்க்க)

முடிகொண்டான்

முதலாம் இராசராசன் காலத்தில் (கி. பி. 985—1014) சோழ அரசு, பேரரசாக விளங்கியது. கலிங்க நாட்டை (இப்போதுள்ள ஒரிசா மாநிலம்) கைபற்றிய பின்பு, கி. பி. 1002-ல் ஈழநாட்டின்மீது, படையெடுத்தான் இராசராசன். இப்படையெழுச்சியில், இவன் மகனான முதலாம் இராசேந்திர சோழனே தலைமைவகித்துச் சென்றான். பிறரை அனுப்பி வெற்றி கொள்ளச்செய்து 'பெருமை' பெறுவதென்பது, அந்நாள் அரசர்களிடம் கிடையாது! போர்க்களத்தில் பெற்ற புண்களே, ஒருவன் மணிமகுடம் தாங்குவதற்குரிய மாண்புகளாகக் கருதப்பட்ட வீரகாலம் அது!! அப்போது, இலங்கையை ஆண்டவன், ஐந்தாம் மகிந்தன் என்பான். தமிழரசினின் போர்ப்பறை கேட்டு, இலங்கை வேந்தன், உருகுணை எனும் ஊர் நோக்கி ஓடி ஒளிந்தான்! என்னே, தமிழர்தம் வீரம்! மாற்றான் ஓடி ஒளிந்ததால், வடபகுதி முழுமையும், சோழ அரசன் ஆளுகைக்குட்பட்டது. இதுகாறும் தலைநகரமாக விளங்கிய அனுராதபுரம் அழிக்கப்பட்டமையால், 'ஜனநாத மங்கலம்' எனும் பெயரோடு பொலநறுவை தலைநகராக விளங்கியது. முன்பு தோற்றோடிய மகிந்தன், பெரும்படையொன்றினைத் திரட்டி, இழந்த நாட்டினைக் கைப்பற்ற முயன்றான். இதனால் இராசேந்திரன், மீண்டும், ஈழத்தின் மீது படையெடுத்து சிங்கள மன்னர்களின் வழிவழியுரிமைபடைத்த முடியினையும், அவர்தம் தேவியரது முடியினையும் கைப்பற்றினான்.

மக்கள் புகழ்ந்த மந்திரி

—[வி. ஆர். துரை]—

அரசன் அன்னக்காவடியாகி ஓடுவதும், ஆண்டி சிம்மாசனத்தில்போயமர்ந்து செங்கோலோச்சுவதும், உலகத்தில் அவ்வப்போது நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். இத்தகைய தலைகீழ் சம்பவங்கள், விளையாட்டேபோல் நடந்தவாறுதான் உள்ளது. வயிறாகிய குகைக்குவேண்டிய சமாதானம் சொல்ல இயலாமல், வாழ்க்கைப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தவர்கள், பெரிய மனிதர்களாகி விடுகின்றார்கள். செத்துச்செத்துப் பிழைத்துக்கொண்டிருந்த அவர்களை நாடி, பெரும் புகழ் ஓடோடி வந்து சேருகின்றது. சரித்திரப் பொன்னேட்டின் சில பக்கங்களில் அவர்தம் புகழ் பேசப்படுகின்றது. 'பெரிய' மனிதர்களாக வாழ்ந்தவர்களின் பேரின்ப வாழ்க்கை, பலர் சிரிக்கக் கேவலமாகப்போய் முடிகின்றது. ஒண்ட இடம் தேடி அங்குமிங்கும் அல்லாடுகின்றார்கள். இவற்றையெல்லாம் விதியின் விளையாட்டு என்று, யோசிக்காமல் சுலபமாகச் சொல்லிவிடுவதில் அர்த்தமில்லை. அவரவர்களின் நடத்தையே, உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாக அமைகின்றது.

ஆம், இருக்கும் இடம் தெரியாமல், எங்கோ ஒரு மூலையில், காலத்தைக் கழித்துக்கொண்டிருந்த வில்லியம் பிட், இங்கிலாந்தின் பெரிய அமைச்சராக வந்தார். மக்களால் கொண்டாடப்பட்டார். எல்லோராலும் 'பிரிட்டனைக் காப்பாற்ற வந்த பிட்' என்று புகழப்பட்டார். அமைச்சனாக வந்த அவ்வீரன், 'என் நாடு ஒரு பெரிய நாடாக இலங்கவேண்டும்; புவியெங்கும் என் தாய்நாட்டின் புகழ் பேசுதல் வேண்டும்' என்று முழக்கம் செய்தான்.

தமிழகத்தின் 'பெரிய மனிதர்கள்', செத்த பிணமாகத் திரிகின்றார்கள். என்றென்றும் வடக்கே இருக்கின்ற தலைவர்களின், எடுபிடிகளாக — ஏவலாட்களாக இருப்போம் என்று, வெட்கமில்லாமல் தங்களின் செயல்மூலம் விளம்பரப் படுத்திக் கொள்ளுகின்றார்கள். "தமிழ்நாடு" என்று, பெயர் வைக்கச் சொல்லி வேண்டினால், தமிழ் நாட்டின் அமைச்சர்கள் பித்தலாட்டம் பேசிக்கொண்டு ஊர் சுற்றுகின்றார்கள். அந்தக் கதையை எல்லாம் நினைத்துக்கொண்டால் நெஞ்சு நோகிறது. இதய வலி தாங்கிக்கொள்ள இயலவில்லை.

நாட்டுப்பற்று மிக்க அவன்—வில்லியம் பிட், அஞ்சாமல் தேடித் தந்த வெற்றியால், பிரிட்டன் ஒரு பெரிய நாடாக மாறியது. ஆற்றல் மிக்க அந்த அரசியல் மேதையால், பிரிட்டனுக்கிருந்த செல்வாக்கு பன்மடங்கு உயர்ந்தது. அவன் ஆட்சிக் காலத்தில், வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சிகள் பல நடந்தேறியுள்ளன. நற்பண்புகள் பலவற்றின் தந்தையாக—நாட்டிற்குத் தொண்டு செய்வதையே தமது தலையாய கடமையாகக் கொண்ட பிட்டை, தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு மக்கள் கூத்தாடியதில் வியப்பொன்றும் இல்லை.

ஆளும் கட்சிக்கு, அந்த அறிஞனை நினைக்கும்போதெல்லாம் காய்ச்சல் அடிக்கும். அமைச்சர்கள் அவமானத்தைச் சகிக்க முடியாமல் பயந்து செத்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள், ஒரு வார்த்தை எதிர்த்துப் பேச நடுநடுங்கினார்கள். இயற்கையாகவே வில்லியம் பிட்டிற்கு அமைந்திருந்த, வெல்லமுடியாத நாவன்மைதான், இவ்வளவு பேரின் பயத்திற்கும் காரணமாக இருந்தது. விவாதத்தில் இணையற்ற அவர், பெரிய நாவலராக விளங்கினார். அனைவருமே அவரின் அடிமைகள் என்றுதான் சொல்லவேண்டும். எதிர்க் கட்சிகளின் இழிவான நடத்தையையும், ஆளும் கட்சியின் போக்கையும் கண்டு, சில பல நேரங்களில் அவர் எரிமலையாவார். அப்போது அனைவருமே அஞ்சி, அடங்கி ஒடுங்கி எங்கோ மறைந்திடுவார்கள், கதிரவனைக் கண்ட பனிபோல! ஒரு சொற்போர் மன்னன் என்று சொல்ல, உள்ளம் துடிக்கின்றது. இனிமைக் குரலெடுத்து முழங்கும் அவரின் கவர்ச்சிகரமான பேச்சைக் கேட்டு, இதயத்தைப் பறிகொடுக்காதவர்கள் எவரும் இருக்கமுடியாது.

கம்பீரமான தோற்றம் கொண்ட வில்லியம்பிட், தான் பிறந்த தாயகத்தின்மீது, தன் உயிரையே வைத்திருந்தார். அந்த நாளில் அரசியல் உலகில் ஈடுபாடு கொண்டு, காலத்தைச் சுகமாக கழித்துக்கொண்டிருந்தவர்களெல்லாம், மேல்வருமானங்கள் வாங்குவதை, ஒரு சம்பிரதாயமாகக்கொண்டு ஒழுகி வந்தார்கள். அத்தகைய வருமானத்தை, வலியச் சென்று ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியும், பிட் மறுத்துவிட்டார். அப்படி வாங்குவதை இழிவான செயல் என்று கண்டித்தார். படைகளுக்கு வேண்டிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் திறமை, பிட்டிற்கு இருந்ததைப் போல் அதுவரையில் எவருக்கும் இருந்ததில்லை என்று சொல்லப்படுகிறது. ஆற்றல் மிக்க வீரர்களை உயர்ந்த இடத்திற்குத் தூக்கிவிடவும்—பெருமை செய்யவும் எப்போதும் அவர் தவறியதில்லை. 'தம்மை மிஞ்சிவிட்டால் என் செய்வது?'—அந்த நிபுணன் இவ்வாறு நினைத்துப் பொருமை கொண்டானில்லை. சோம்பலாகச் சென்றவர்கள் பிட்டைக் கண்டு பேசிவிட்டுத் திரும்பும்போது, சுறுசுறுப்பாகத் தென்படுவார்கள். கோழையாகச் சென்றவர்கள் வீரர்களாக வெளியே வருவார்கள். நம்பிக்கை இழந்தவர்கள்

அவரின் திருமுகத்தைக் கண்டால், புத்துணர்ச்சியும் மனவெழுச்சியும் பெறுவார்களாம்.

ஒரு முறை எப்படியோ அமைச்சராகிவிட்டால், தம்மை அந்த இடத்திற்குத் தூக்கிவிட்ட பணத் திமிங்கிலங்களை மறக்காமல், புதிதாக வந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அனைவர்க்கும் உத்தியோகங்களை வாரி வழங்கி, ஆதரிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக்கொண்டு, என்றென்றும் அந்த உல்லாசமான இடத்திலேயே சுகமாக உட்கார்ந்துகொண்டு, காலம் கழிக்கும் கெட்ட பழக்கம், சிறப்பாக நடைமுறையில் இருந்து வந்தது. அந்த அரசியல் அநாகரிகத்தை, அமைச்சராகப் பிட் வந்ததும் சாகடித்தார், ஒரு நல்ல செயல்!

வில்லியம் பிட் எப்படி அமைச்சராக வந்தார்? மக்களின் தலைவரான அவருக்கு, எவ்வாறு அந்தப் பதவியை எட்டிப்பிடிக்கமுடிந்தது? இதனை அறிய உள்ளம் விழைகின்றதல்லவா? அது ஒரு சுவையான கதை.

வால்போல் பதவியிலிருந்து விலகினார். அங்கே வில்மிங்டன் வந்து உட்கார்ந்தார். கொஞ்சக் காலம்தான் அவரால் இருக்க முடிந்தது. அந்த அமைச்சர் பதவிக்கு ஹென்றி பெல்ஹாம் வந்தார். கார்ட்டரெட் எனும் பெயர் கொண்டவர், அயல்நாட்டு விவகாரங்களைக் கவனித்து வந்தார். வால்போலுக்கிருந்த தனிப்பெரும் செல்வாக்கைத் தரைமட்டமாக்கிய வில்லியம் பிட்டின் கண்களிலிருந்து, கார்ட்டரெட் தப்பமுடியவில்லை.

“அரசனுக்கும் அவர் கொஞ்சி மகிழும் அழகு இராணிக்கும் நிழலாக இருக்கிறார். நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம், அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆங்கிலேயர்களின் நலன்களை யாருக்கோ பலியிடுகிறார் என்பதை, நெஞ்சில் நிறுத்திக்கொள்ளுங்கள். ஹானோவர் நலன்களுக்காகப் பாடுபட்டு, அரசரிடம் நற்சான்றிதழ் பெறுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்” இப்படியெல்லாம் குற்றம் சாட்டினார். ஆட்சியாளரின் கோணல்களையெல்லாம் ஆயிரக் கணக்கிலே மக்களைக் கூட்டி, அமைதியாக எடுத்துச் சொல்லி அம்பலப்படுத்தினார். அமைச்சர் பெல்ஹாமை அவ்வப்போது படம் பிடித்துக் காட்டினார்.

ஒரு பதவியை வில்லியம் பிட்டிற்கு கொடுத்தாவது சரிப்படுத்த — சமாதானம் செய்ய — குறிப்பாக வாய்க்குப் பூட்டுப் போட பெல்ஹாம் திட்டமிட்டார். அந்த யோசனையை மன்னரின் முன்னிலையில் சென்று அவிழ்த்தார். ‘அந்தப் பித்தலாட்டக்காரனுக்கு பதவியா? ஹானோவரைப் பழித்துக்கொண்டு திரிபவனுக்குக் கொடுக்கலாமா?’ அமைச்சரின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளாமல் அரசர் புறக்கணித்துவிட்டார். அப்படியென்றால் தொடர்ந்து செயலாற்ற முடியாதென்று கூறி, அவ்வாறே பெல்ஹாம் சட்டென்று பதவியிலிருந்து விலகிக்கொண்டார். என்ன செய்வது? மன்னர் பெரியதொரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டார். அவர் எதிர்பார்க்கவில்லை! கசப்பாக இருந்தாலும் வேறு வழி தெரியாமையால், காவலன் கடைசியில் ஒத்துக்கொண்டான். உதறித்தள்ளிய பதவியில் பெல்ஹாம் திரும்பவும் வந்தமர்ந்தார், சேனைகளுக்குச் சம்பளம் கொடுக்கின்ற உத்தியோகம் பிட்டிற்குக் கிடைத்தது.

நல்ல சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, வேலையில்லாத அப்பதவியில் பத்து ஆண்டுகள் அவர் இருந்ததாகத் தெரிகின்றது. சோம்பேறித்தனமான அந்த வாழ்க்கை, சுறுசுறுப்பான பிட்டிற்குப் பிடிக்கவில்லை. ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கி, தமது உள்ளத்திலேயே மேலும் மேலும் அதை வளர்த்து வந்தார். அது நிறைவேறும் காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார், விரைவாகவே அந்த நல்ல காலமும் வந்து சேர்ந்தது.

எல்லோருக்குமே ஒரு நாளைக்கு சாவு வருகின்றது. யாரையும் அது விட்டுவைப்பதில்லை. எவரும் அதன் கூரிய கண்களிலிருந்து தப்பிவிட முடியாது. அனைவரும் அதற்கடிமை. பளபளவென மின்னும் பூவையரையும்; ப்யூக் காரில் பறக்கும் ஆண்களையும், தவறாமல் தனக்கது விருந்தாக்கிக் கொள்ளுகின்றது. சாகப்போகும் மனிதர்கள், பொய்மையையும் பொறாமையையும் மூலதனமாகக்கொண்டு, சுயநலப் பேய்களாய்த் திரிவதைப்பார்த்து அது சத்தம் போட்டுச் சிரிக்கின்றது. அழியப்போகும் அவர்களின் பேராசை கண்டு கேலி செய்கின்றது. இன்னும் கொஞ்ச நாளைக்கு பெல்ஹாமை விட்டுவைக்க, அந்தச்சாவு விரும்பவில்லைப்போலும்! சரி, அந்த அமைச்சர் செத்துப் போய்விட்டார். அதற்காக இரண்டாம் ஜியார்ஜ் மிகவும் கஷ்டப்பட்டார்; கண்ணீரும் விட்டழுதார். துக்கம் தொண்டையை அடைக்க ‘இனியேது எனக்கமைதி’ என்று உருக்கமாகக் கூறியுள்ளார்.

துரைத்தனத்திலே தலைமையிடம் காலியாகிவிட்டது. எப்படியோ அந்த இடத்தை நியூகாசில் பிடித்துக்கொண்டார். இவர் வேறு யாரும் இல்லை; மறைந்துவிட்ட மந்திரியின் அண்ணன். பொதுச் சேவையில் சொந்தப் பணத்தைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு, ஆர்வமுடையவராக இருந்தார். ஒரு சிறந்த அரசியல்மேதை என்று இவரைப் புகழ்ந்துவிட்டால், வரலாறு தெரிந்தவர்கள் சண்டைக்கு வந்துவிடுவார்கள். என்னதான் அரசியல் அனுபவம் இருந்தாலும் அண்ணன் நியூகாசில், திறமையில் தம்பி பெல்ஹாமுக்கு இளைத்தவர் என்பதை மறுக்க முடியாது. அப்படி எடுத்துக்கொண்டால், வால்போலுக்கிருந்த திறமையில், பாதிதான் பெல்ஹாமிடம் காணப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பெரிய போரிலே எதிர்பாராதவிதமாக பிரிட்டன் மாட்டிக்கொண்டது. ஆழந் தெரியாமல் காலைவிட்டதால் இங்கிலாந்து ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொண்டது. ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு இன்னொன்றாகும் அல்லவா? கை வைத்த இடங்களிலெல்லாம் வெற்றிக்குப் பதிலாக, பிரிட்டிஷ்படைகளுக்குத் தோல்வியே ஒட்டிக்கொண்டு வந்தது. போர் செய்கின்ற கலையிலேயும், அதனைத் திறம்பட நடாத்துகின்ற அனுபவத்திலும், நியூகாசில் பச்சிளம் குழந்தையாக இருந்தார். இந்தப் பேருண்மையை அவராலேயே மறுக்க முடியாது.

அரசியல் துறவியாகக் கொஞ்சக் காலம் இருந்த வில்லியம் பிட் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்

கொண்டு, தீவிரமாகக் காரியத்தில் இறங்கலானார். காலம் அறிந்து நடக்கின்ற புத்திசாலித்தனம் அவரிடமிருந்தது. பழுக்கின்ற பருவகாலம் வந்தால்தான், மரங்களெல்லாம் பழுக்கும் என்பதை நன்கவர் அறிந்திருந்தார். புயல் வேகத்தில் பிரச்சார மழை பொழிந்தார். ஆட்சியின் ஊழலையும் — அமைச்சர்களின் கையாலாகாத்தனத்தையும் — நாட்டின் எதிர்காலத்தையும் சுட்டிக்காட்டினார். அவரால் எடுத்துச் சொல்லப்படும் உண்மைகளை, மறுத்துரைக்க இயலாமல் ஆட்சியாளர்கள் திணறினார்கள். எல்லாம் தெரிந்துகொண்ட மக்கள், மன்னன்மீதும் அவருக்குப் பிரியமான மந்திரியின் மீதும் வெறுப்படைந்து, புரட்சி உள்ளம் கொண்டார்கள்.

"இன்னுமா நியுகாசில் தொடர்ந்து அமைச்சராக இருப்பது? அனுபவமற்ற ஒருவரைப் போர்க்காலத்தில் அமைச்சராக இருக்கவிடலாமா? இந்த நிலைமையே நீடித்தால், இங்கிலாந்து நிச்சயமாக எதிரிகளின் வேட்டைக் காடாகும். நந்தம் புகழ் மிக்க நாடு, பகைவர்களின் சொந்த வீடாகும். நாமெல்லாம் மாற்றாரின் குற்றேவல் செய்யும் அடிமைகளாவோம். எனவே, இனியும் நாம் தூங்கிக்கொண்டிருப்பதில் யாதொரு பயனுமில்லை. அவர் விலகவேண்டும்; விலகும்படி செய்யவேண்டும். எப்படியாவது—இரத்தம் சிந்தியாவது அந்த இடத்தில் பிட்டைக் கொண்டுவந்து, உட்காரவைக்க வேண்டும். அதிகார மோகம் கொண்ட அன்பர் நியுகாசில், தமது பதவியைச் சுலபத்தில் விட்டுக்கொடுக்கச் சம்மதிக்க மாட்டார். நாமாகத்தான் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவேண்டும். மந்திரிப்பதவி தரும் உல்லாச வாழ்வை, உதறித்தள்ள மனசு இலேசில் இடங்கொடுக்குமா?" மக்கள் கூடிக் கூடிப் பேசிக்கொண்டார்கள். இல்லை இல்லை — கூக்குரல் எழுப்பினார்கள்.

அரசனின் செவியில் நேராகப் போய் அந்த முழக்கம் விழுந்தது. அவன் அரசனாயிற்றே! மக்களின் குரலுக்கு உடனடியாக மதிப்புக் கொடுத்து, பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளுவானா? ஒரு நூறு தலைகள், பனங்காய்களை வெட்டுவதைப்போல் சீவித்தள்ள வேண்டும்; இருநூறு பேராவது கரம் இழக்கவேண்டும் — காலிழக்க வேண்டும்; இராணுவத்தின் ஜம்பம் ஒன்றும் சாயாது என்ற நிலை வருதல் வேண்டும். அப்போதல்லவா ஆட்சிசெலுத்துபவரின் கவனம், மக்களின் பக்கம் மெதுவாகத் திரும்பும்; கல் மனம் கனியும்; சாதகமான சில வார்த்தைகள் வேண்டா வெறுப்புடன் பிறக்கும். கடைசியாக மக்களின் கரம் உயர்ந்துவிட்டது. கொற்றவன் நிலைக்கே ஆபத்து வந்துவிடும் போல் தோன்றியது. மக்களின் விருப்பத்திற்கேற்ப நடந்துகொள்ள, மன்னன் முடிவு செய்துவிட்டான். இந்த அறிவு ஆரம்ப காலத்திலேயே உதயமாகி இருந்தால், எத்துணை சிறப்பாக இருந்திருக்கும்? மக்களின் சக்தியே வென்றது. அவர்கள் நினைத்தது நடந்தது. தோற்றுப்போய்விட்டான் கொற்றவன். அவன் நினைச்சது ஒண்ணு—நடந்தது ஒண்ணு என்றாகிவிட்டது.

மக்கள் விரும்பினால் எதுவும் நடைபெறுது. வேந்தன் பெரிய மனது வைத்தால்தான், எந்தக் காரியமும் வெற்றிகரமாக நடக்கும் காலம் அது. அந்த நேரத்தில் தமக்கு எள்ளளவும் பிடிக்காத ஒருவரை, குடிமக்களின் விருப்பத்திற்கேற்பத் தலையசைத்து, ஆற்றல் மிக்க அந்த வீரனை அரசன் அமைச்சராக ஏற்றுக்கொண்ட சிறப்பான நிலை, இங்கிலாந்தின் வரலாற்றிலேயே நடந்தது. இதுவே முதல் தடவையாகும். அதற்கு முன்னால் இப்படியொரு புரட்சிகரமான சம்பவம் நடைபெற்றதே இல்லை. அரசியல் வளர்ச்சியில் ஒரு நல்ல திருப்பம்!

இந்த இடத்தில் ஒன்றை அவசியம் சொல்லியாக வேண்டும். பலர் பிட்டை அணுகி, நியுகாசிலின் கீழ் உழைக்கவேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள். "நான் நியுகாசிலின் கீழ் இருந்துகொண்டு உழைப்பதா? அது என்னால் ஆகாது." வில்லியம் பிட் மறுத்துவிட்டார். எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும், சமமாகாத நியுகாசில் என்பவரின்கீழ், வில்லியம் பிட் உழைக்க வேண்டும் என்று உரைப்பவர்களின் கூற்று அறிவுடைமையாகாது; சுத்த முட்டாள்தனமான பேச்சாகும். சிக்கலான ஒரு பிரச்சினை. அதைத் தீர்த்து வைக்க வேண்டியது, ஆள்பவரின் கடமையல்லவா? டெவன்ஷைர் ட்யூக் தலைமையமைச்சரானார். அவருக்கு விக் பிரபுக்களிடம் மிக்க மதிப்பிருந்தது. அவர் உண்மையான மந்திரி அல்ல! வேறு என்ன என்று கேட்கிறீர்களா? அதாவது பொம்மை மந்திரி! அதிகாரமற்ற தமிழ்நாட்டின் மந்திரிகளைப் போல!! ஆட்சியின் முக்கிய நடவடிக்கையெல்லாம் கவனிக்கின்ற பொறுப்பனைத்தும், பிட்டின் கைக்கு வந்தது. அவர்தான் இப்பொழுது அரசாங்கக் காரியதரிசி.

பதவியிலிருந்து நியுகாசிலை ஓட்டிவிட்டபின், பிட்டின் கைக்கு அதிகாரம் வந்துற்றதும், அவர் மிக்க தீவிரமாக வேலையிலிறங்கினார். ஆயிரக்கணக்கிலே மாலுமிகளையும் படை வீரர்களையும் திரட்டிவிட்டார். அமெரிக்காவிற்கும் எட்டுப் பட்டாளங்களை அனுப்பிவிட்டார். ஆனாலும் பார்லிமெண்டில் அவருக்குச் செல்வாக்கு இல்லை. நாட்டிலே அவருக்கிருந்த செல்வாக்கை, எவராலும் எட்டிப் பிடிக்க இயலவில்லை. அத்தகைய அறிஞனுக்கு பார்லிமெண்டில் ஆதரவு இல்லை. நாட்டிலே அதற்குள்ள சக்தி அதிகம். எதிரிகள் தமக்கில்லையே என்று வயிற்று வலி படுகின்றார்கள். ஆனால் சட்டமன்றத்திலே அதற்குள்ள ஆதரவு குறைவு. என்றைக்கும் இந்த நிலையே நிச்சயம் நீடிக்காது. குஞ்சரத்தின் மீதமர்ந்து சென்ற அரசனும், காலால் நடந்து செல்லுகின்ற பரிதாபத்திற்குரிய கீழ்நிலைக்கு, ஒரு காலத்தில் வந்தடைவான் என்பதில் ஆச்சரியமில்லை அல்லவா?

பிரபுவாகிய நியுகாசிலுக்கு நல்ல செல்வாக்கிருந்தது. அவரைப் பதவியிலிருந்து விரட்டி விட்ட தம்முடைய எதிரியாகிய பிட்டை, மறக்க முடியுமா? தமக்குள்ள செல்வாக்கு முழுவதையும் பிரயோகித்து, பிட்டை அமுக்கிவிடக் கழுகுக் கண்களால் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். கொஞ்சக் காலம் கழிந்தது. இன்னுமா பிட்டை மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார்கள்? அவர்கள் என்றோ மறந்துவிட்டிருப்பார்கள் என்று அவசரப்பட்டு, அமைச்சர் பதவியினின்று பிட்டை, அரசர் நீக்கிவிட்டார்.

அதனால் பெருத்த அவமானம் அடைந்தார். பொதுமக்கள் 'பிட்தான் அமைச்சராக வேண்டும்' என்று பிடிவாதம் செய்தார்கள். அவர்களின் புரட்சி முதல் முறையைவிட அதிகமாகவே இருந்தது. என்ன செய்வதென்றே புரியாமல் ஆந்தைபோல் மன்னர் விழித்தார். ஆனாலும் ஒரு நல்ல வழி இந்தத் தடவை பிறந்தது.

இரண்டு எதிரிகளும் ஒன்று சேர்ந்தார்கள். இப்போது அவர்கள் நண்பர்கள். வேழமும் சிங்கமும் நண்பர்களாக மாறின! நீரும் நெருப்பும் ஒன்று சேர்ந்திருக்க முடியுமா? வேற்றுமையையும் சொந்தப் பகையையும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செயலில் இறங்கினால்தான், எந்தக் காரியமும் வெற்றிகரமாக நடக்கும் என்பதை, இருவருமே நன்கு உணர்ந்துகொண்டார்கள். ஆனாலும் அந்த இரண்டு பேருக்கும் இருந்த கசப்பு, அறவே ஒழிந்துவிட்டதாகத் தெரியவில்லை. அப்போதைக்கு அப்படிப்பட்ட தீய எண்ணம், இல்லாததைப்போல் காட்டிக்கொண்டார்கள். அவ்வளவுதான்! ஒரு கூட்டு அமைச்சினை அரசியல் நிபுணன் பிட்—செல்வாக்குள்ள நியுகாசில் ஆகிய இருவரும் சேர்ந்து நிறுவினார்கள். இந்த அமைச்சு பிரிட்டனை, வானத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டது. அதனுடைய வலிமையைக் கண்டு மாற்றார் அஞ்சினார்கள். கனவில் கூட எதிர்ப்பார்க்காத பெருமதிப்பு வந்து சேர்ந்தது.

அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் வாழ்ந்தார்கள். அஃதேபோல் பிரெஞ்சுக்காரர்களும் அங்கு குடியேறி இருந்தார்கள். இரு சாராருக்கும் ஒரு பெரிய போராட்டம் நடந்துகொண்டே இருந்தது. அடிக்கடி சண்டை போட்டு மண்டை உடைத்துக்கொண்டார்கள். இரண்டு நாகரிகமும் அங்கே நிச்சயமாக வளரமுடியாது. ஒன்றுதான் நிலைக்க முடியும். மற்றொன்று கட்டாயம் சாகத்தான் வேண்டும். இந்த உண்மையை—குடியேற்ற நாடுகளின் முக்கியத்தை முதன்முதலாக உணர்ந்த பிட், ஆட்டம் போடும் பிரெஞ்சுக்காரர்களின் கொட்டத்தை மட்டந் தட்டி, சரியான பாடம் கற்பிக்கச் செயலில் இறங்கிவிட்டார். ஏற்கெனவே இருந்த படைத்தலைவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, தமக்குப் பிடித்தமானவர்களை — அப்படியென்றால் திறமைசாலிகளை — படைத் தலைவர்களாக்கினார். கஜானா அதிகாரிகளைக் கலக்காமலேயே பணத்தைக் காலி செய்தார். சண்டை மூண்டுவிட்டது. கணக்கற்றவர்கள் மாண்டுவிட்டார்கள். பல பிரெஞ்சுத் தளபதிகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டார்கள். இறுதியாக 'ஏப்ரஹாம் குன்றுகள்' மீது நடந்த கைகலப்பில், இரண்டு நாட்டின் படைத் தளபதிகளும் மறைந்துவிட்டனர். அந்தோ பரிதாபம்! வெற்றி மாலையைப் பிட் சூடினார். அத்துடன் பிரெஞ்சுக்காரர்களின் ஆரவாரம் அழிந்தது. அங்கே-வட அமெரிக்காவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் வேரூன்றிவிட்டது. அதில் இனி யாரும் தலையிட இயலாது.

கடலாதிக்கத்திலும் ஆங்கிலேயருக்கு, பிரெஞ்சுக்காரர் தொல்லைகொடுக்கத் தவறவில்லை. வம்புக்கு வந்த அவர்களின் வாலை ஒட்ட அறுத்து, பிட் சுண்ணாம்பு தடவிவிட்டார். மூட்டைப் பூச்சியை நசுக்குவதுபோல் நசுக்கிவிட்டார். கடலாதிக்கம் ஆங்கிலேயரின் ஏகபோக உரிமையாகியது. அதை எதிர்ப்பதற்கு ஆள் இல்லை என்ற நிலையுண்டாகிவிட்டது. அவ்விதம் பிட் செய்துவிட்டார்.

ஒரு பேரரசைக் கட்டியாளும் வல்லமை, பிரிட்டனுக்கு உண்டு என்பதைப்பிட் நிரூபித்துவிட்டார். கனவிலும் எதிர்பார்க்காத பெருவாழ்வை, தமது நாட்டிற்குச் சம்பாதித்துக் கொடுத்தார். கள் குடித்தவர்கள்போல், தெருக்களில் மக்கள் இன்பத்தால் தள்ளாடினார்கள். அந்த மகிழ்ச்சியில் வெற்றிக்கொடி நாட்டிய பிட்டை அவர்கள் மறந்துவிடவில்லை. ஒரு வெற்றிகரமான மாறுதலையுண்டாக்கிய அறிஞனை, மக்கள் மறந்துவிட முடியுமா? சென்றவிடமெல்லாம் அவருக்குச் சிறப்புச் செய்தார்கள். ஆட்டம் ஆடியும் பாட்டுப்பாடியும் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்கள். எல்லாம் மறந்து அவரைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து ஆனந்தப்பள்ளுப்பாடிக்கூத்தாடினார்கள். ஒரு சிறந்த அரசியல் அறிஞன் — திறமைமிக்க பெரிய அமைச்சன் — மாந்தருள் மாணிக்கம் — மக்களின் தலைவன் என்றெல்லாம் அவரைப் புகழ்ந்து இன்பத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டித் தூங்க வைத்தார்கள்.

இருபத்து மூன்றே வயது நிரம்பிய மூன்றாம் ஜியார்ஜ் பட்டத்திற்கு வந்ததும், அரசாங்கக் காரியதரிசியாக, தமக்குப் பாடம் சொல்லித் தந்த ஆசிரியர் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தியதாகவும், அதனால் கோபமடைந்த பிட் பதவியை உதறிவிட்டார் என்றும், அதைப்பார்த்து மகிழ்ச்சியால் உரக்கச் சிரித்த எதிரி—போர் முகத்தை அறியாப் "புலியேறு" நியுகாசிலின் சிரிப்பு அடங்குவதற்குள், அவரிடமிருந்த அதிகாரமெல்லாம் அரசர் பிடுங்கிக்கொண்டதால், ஆத்திரமடைந்த அமைச்சரும் பிட்டின் வழியையே பின்பற்றிவிட்டாரென்றும், அரசனின் சொந்த விவகாரத்துக்காகப் பிரிட்டனின் பணத்தையும் படையையும் பாழாக்குகிறார்கள் என்று முழக்கம் செய்து புகழ்பெற்ற பிட்டே, பதவிக்கு வந்ததும் அதே குற்றத்தை செய்தாரென்றும், அப்படியே விரும்பியளிக்கும் கௌரவங்களையெல்லாம் வேம்பாக வெறுத்தொதுக்கிய அவர், புகழ் வந்துற்றகாலை கொடுக்கின்ற பட்டமனைத்தும் கரும்பாக விரும்பி ஏற்றுக்கொண்டாரென்றும், அது மட்டுமல்லாமல் அவருடைய போக்கிலேயும் பல்டியடித்து மாறுதல் செய்துகொண்டு, புதியதொரு பாதையில் திடீரெனச் சென்றாரென்றும், அதனால் அந்தப் பெரியாரை ஆதரிக்காமல் மக்கள் வெறுத்தொதுக்கி, கைகழுவிவிட்டார்களென்றும் சரித்திரம் சொல்லுகின்றது.

ஏது எப்படியாயினும் பேரையும் புகழையும் பெருவாழ்வையும், பிரிட்டனுக்குச் சம்பாதித்துக் கொடுத்த அறிஞர்களின் வரிசையிலே, தாய்நாட்டுப்பற்று மிக்க வில்லியம் பிட்டிற்கு ஒரு தனி இடம் உண்டு.

★

"கொதிக்காதா உள்ளம்!"

இலங்கைத் தீவில் ஒரு வழக்கு. "இதுபோன்ற சோகமான வழக்கினை நீதிமன்றம் இதுவரை கண்டதில்லை" என்கிறார், அந்த வழக்கை விசாரித்த நீதிபதி.

அத்தகு சோகமிக்க வழக்கில் சாட்சியம் கூறியோரில் முக்கியமானவர் பூரணம் என்பார். 20 வயது கூட நிரம்பப்பெறாத பருவமங்கை.

இந்த வழக்கைப்பற்றிய செய்திகளை, அந்த நாட்டுப் பத்திரிகைகள் மிக விரிவாகப் பிரசுரித்திருக்கின்றன.

இருப்பினும் எங்கே அந்த வழக்கினைப்பற்றிய செய்திகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நம் கண்களிலேபடாது போய்விடுகின்றனவோ என்ற அச்சத்தாலோ என்னவோ, அங்கிருக்கிற ஒரு நண்பர் அவற்றைச் சேகரித்து நமக்கு அனுப்பியிருக்கிறார்.

அவரது பெயரை வெளியிடுவதுகூட நல்லதல்ல — இருப்பினும் அவருக்கு நாம் நன்றி செலுத்திடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மொழிப் பிரச்சனையின் காரணமாக, இலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்பின்போது, அங்கிருந்த தமிழர்கள்பட்ட அவதிகள் கொஞ்சநஞ்சமல்ல. படுகொலைக்கு உள்ளானோர் பலர். அங்கவீனர்களாக ஆக்கப்பட்டிருப்போர் எண்ணிறந்தோர். காயங்கள் பட்டோர் தொகை மட்டும் 15,000 என்று அரசாங்கத்தின் புள்ளிவிவரமே கூறுகிறது.

இத்தகு 'கோரத் தாண்டவ' காலத்தில் சிதறுண்ட ஒரு குடும்பத்தின் சோக வரலாறுதான் இந்த வழக்கு.

இதோ அந்தப் பெண்மணி தந்திருக்கும் சாட்சியம்:—

"கடந்த மே மாதம் 27ந்தேதி நடுப்பகலில் கூட்டமாகப் பலர் என் மாமன் வீட்டிற்கு அருகாமையில் வந்து சிங்கள பாஷையில் கூச்சலிட்டனர், அச்சமயம் வீட்டுக்குத் தீவைக்கப்பட்டது. நான் எனது மாமன் மருதமுத்து, அவரின் மனைவி வள்ளியம்மா, மகள் பொட்டு ஆகிய நால்வரும் உயிருக்குப் பயந்து உடுத்த உடையுடன் அருகாமையிலிருந்த காட்டிற்குள் ஓடி வயலின் ஊடாகச் சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது எங்களைப் பின்தொடர்ந்து பலர் கூட்டமாக வந்தார்கள். அவர்களின் கையில் கம்புகள், கத்திகள், ஒருவரிடம் துப்பாக்கியும் இருக்கக் கண்டேன். அப்பொழுது திடீரென மருதமுத்துவின் மீது துப்பாக்கிச்சூடு விழுந்தது. அவர் அலறிக் கீழேவிழுந்தார். விழுந்தவரைத் தூக்கிச் செல்ல மற்ற நாங்கள் மூவரும் எத்தனிக்கையில், வள்ளியம்மாள் மீது துப்பாக்கிச்சூடு பாய்ந்தது. அவரும் விழுந்தார். அச்சமயம் என் கை இரண்டிலும் துப்பாக்கி ரவைகள் பட்டு இரத்தம் பீறிட்டு வந்தது. பொட்டு பயந்து ஓடிவிட்டாள்.

M. S. **வெங்கடாசலம்,** M. A.,

அப்பொழுது என் அருகாமையில் இருவர் வந்து மண்வெட்டிக் கழியால் பின்புறமாகத் தாக்கியதைத் தொடர்ந்து நான் விழுந்தேன். நான் மூக்கில் அணிந்திருந்த தங்க மூக்குத் திருகு இரண்டை எடுத்துச் சென்றார்கள். வேறு தங்க நகைகள் எதுவும் என்னிடம் இருக்கவில்லை. நினைவு தடுமாறிப் பிரக்ஞையற்று இறந்தவள் போல் பல நிமிஷம் கிடந்தேன். என் மாமி, வள்ளியம்மாளின் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு எழுந்தபொழுது கலககாரர்கள் ஒருவரும் அங்கு இல்லை. என் மாமி, உயிர் போகும் தறுவாயில் தன் மடியில் ரூ. 3800 இருப்பதாகவும் அதை எடுத்துச்செல்லுமாறும் கூறி உயிர் நீத்தார்.

அதற்குமுன் என் மாமன் ஆவி பிரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். என் கையிலும் சூடுபட்டிருந்தபடியால் அதன் வேதனை தாங்க முடியாமல் அப்பணத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை.

மேலும் அவ்விடமிருந்தால் என்னையும் சுட்டுவிடுவார்களெனப் பயந்து நான் அருகில் இருந்த காட்டுக்குள் ஓடி மறைந்துகொண்டேன்."

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்மணி தேம்பித் தேம்பி அழுதாராம்.

வீடு தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது — மாமனார் கொல்லப்பட்டார் — மாமிக்கும் அதே கதி— குடும்பமே சிதறுண்டு போயிருக்கிறது — என்பதை எண்ணிடும்போது யாருக்குத்தான் சோகம் பிறக்காமல் போகும்?

அவர் கூறியிருக்கிற சாட்சியத்தைப் படிக்கிற நாமே "இவ்வளவு அக்கிரமமா?" என்று நம்மையறியாமல் கேட்கிறோம் — உள்ளம் கொதிக்கிறது.

இவ்வளவையும் நேரிலேயே பார்த்து, அனுபவித்துப், பதைத்துத் துடித்து, செய்வதறியாது துவண்டு, சாட்சிக் கூண்டேறி நிற்கின்ற அந்த மங்கை என்ன செய்திடுவார் பாவம்!

கதறியழுதாராம், சாட்சிக் கூண்டிலிருந்தபடியே!

நீதிபதியே தேற்றவேண்டிய நிலை ஏற்பட்டதாம்!

எப்படியோ சமாளித்துக்கொண்டு, தமது சாட்சியத்தைத் தொடர்ந்தார்:—

(11-ம் பக்கம் பார்க்க)

"காதற் காட்சி"

அ. சுந்தரம்

இரவு நேரம்! ஓடி ஆடும் சிறுவர் அமைதியுடன் தூங்கும் நேரம். உழைப்போர் ஓய்வு பெற்று உறங்கும் சமயம். கணவன் மனைவியோடு கூடிக் களிக்கும் காலம். ஆனால் ஒருசிறு மாறுதல் உண்டு. இந்த இரவு நேரத்தில்தான் — அமைதிபெறும் வேளையில்தான் — ஒரு சிலர் மட்டும் உறங்காமல் இருப்பார்கள்.

கன்னமிடும் கள்வர்கள் உறங்க மாட்டார்கள்—உறங்க முடியாது! —காரணம்? உறங்கினால் களவாட முடியாது.

ஒண் பொருள் செய்வம் என்பார்க்கும் துயில் இல்லை; அப்பொருள் காப்பார்க்கும் துயில் இல்லை.

காதல் கொண்டோரும் அப்படித்தான், தூங்கமாட்டார்கள். இரவெல்லாம் வேதனையோடு விழித்துக் கிடப்பார்கள். அப்படித்தான் ஒரு நங்கை இரவெல்லாம விழித்துக் கிடக்கிறாள்!

ஒரு நாள், மாலை வேளை!

நன்கு அலங்கரிப்பட்ட பெரிய யானையின் மீது அமர்ந்து கொண்டு வீதிவழியாக வந்து கொண்டிருந்தான் பாண்டியன். அவன்மீது காதல் கொண்ட நங்கை ஒருவள் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். பாண்டியனும் பொது நோக்காகத்தான் அவளைப் பார்த்தான்.

அவ்வளவுதான்! உடனே அவன் நம்மைத்தான் பார்த்தான் என்று நினைக்கிறாள். தன் மீது காதல் கொண்டுவிட்டதாகவும்; தன்னையே மணந்துகொள்வான் என்பதாகவும் எண்ணி மகிழ்கிறாள்.

அதற்குள் பாண்டியனைச்சுமந்து வந்த அந்த யானையும் அவளைக் கடந்து சென்றுவிட்டது. யானை தான் சென்றதே யொழிய, அதன் மீது அமர்ந்துள்ள பாண்டியன் அவளது நெஞ்சைவிட்டுச் செல்லவில்லை. அவளும் வீட்டிற்கு வந்தாள்.

வித்தூன்றிய பின்பு முளைக்காமலிருக்குமா?—வித்தும் முளைத்து, தளிர்விட்டுத் தழைத்து வளர்ந்தது—காதலெனும் அரும்பு மலர்ந்து மணம் வீசத் தொடங்கிற்று.

மகள் காரணமில்லாமல் மெலிந்து போவதையும், எந்நேரமும் சோர்வுடன் இருப்பதையும் கண்ட அவளது தாய், "உணவு கூட ஒழுங்காக உண்பதில்லை! எந்நேரமும் சோர்வோடு காணப்படுகிறாய்—ஏன்? இப்படி இருக்கிறாய்" என்று பலப்பல கேட்கிறாள். அன்னைக்கு என்ன பதில் சொல்லுவது? தான் பாண்டியன் மீது காதல் கொண்டிருப்பதைக்கூறமுடியுமா? எனவே பதில் ஏதும் சொல்லாமல் உறங்குவதற்காகச் சென்றாள்.

ஆனால் அன்று இரவு அவள் நெடு நேரம் உறங்கவில்லை. அலை மோதும் கடலின் நடுவே மிதந்து செல்லும் கலம்போல அவளது உள்ளம் அலைவுற்றிருந்தது. வானத்திலே மிதந்து செல்லும் மேக அலைகள்போல் எண்ண அலைகளிலே மிதந்து தவித்தாள். புரண்டு படுத்தாள் ஒரு சமயம்! எழுந்து நின்றாள் மற்றோர் சமயம்! சாய்ந்து உட்கார்ந்தாள் பிறிதொருசமயம்! ஆறுதல் பெற முடியாது தவித்தாள்! மெல்லத் தன் ஆருயிர்த் தோழியை அழைத்தாள்! தலைவியின் குற்றேவலுக்குக் காத்துக் கிடக்கும் அவளும் அங்கு வந்துசேர்ந்தாள். தோழியைப்பார்த்து:—

தலைவி:- தோழி! எனக்கொரு உதவி செய்யவேண்டும். செய்வாயா?

தோழி:- என்னம்மா! இப்படிக் கேட்கிறீர்கள்! தங்களுக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப்போகிறேன்!

தலைவி:- சொல்லட்டுமா?

தோழி:- தாராளமாகச் சொல்லுங்கள்! உங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்பதை.

தலைவி:- சொன்ன பிறகு மறுக்க மாட்டாயே!

தோழி:- மறுப்பா! தங்களுக்காக எது வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் தட்டாமல் தயங்காமல் செய்கிறேன்! மனதிலுள்ளதைச் சொல்லுங்கள்

தலைவி:- உண்மையாகத்தானே!

தோழி:- தயங்காது இன்னதென்று சொல்லுங்கள்! தவறாமல் செய்து முடிக்கிறேன்.

தலைவி:- அது அறிந்தே உன்னை அழைத்தேன் தோழி! நேராக அரண்மனைக்குச் செல்லவேண்டும். அங்கே குளிர்ந்த தன்மை இல்லாத மதங்கொண்ட யானையின்மேல் ஏறி வந்த தமிழர் பெருமானாகிய தென்னவர் கோன் இருப்பார்!

தோழி:- தூதுபோக வேண்டும் என்கிறீர், அவ்வளவுதானே!

தலைவி:- ஆமாம்!—ஆனால்!

தோழி:- ஆனால் என்னம்மா?

தலைவி:- சொல்லுவதெல்லாம் என்னைப்பற்றி இருக்க வேண்டும். ஆனால் நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்ல வேண்டும்.

தோழி:- ஏனம்மா அப்படி?

தலைவி:- என்னைப்பற்றிச் சொன்னால் நாணமில்லாதவள் இவள் என்று அவர் நினைக்கக்கூடும்.

தோழி:- அதுசரி—தங்கள் பெயரைக் கேட்டால்......

தலைவி:- அதுவும் சொல்லக்கூடாது! நாம்தானே அவனைப் பார்த்தோம். அவனும் நம்மைப் பார்த்தான்! நம்மால் காதலிக்கப்படும் பெண்ணைப்பற்றி இவ்வளவு விரைவில் அறிந்து கொண்டார்களே! — தூதும் வந்துவிட்டதே—என்று எண்ணக்கூடும் அவர்.

தோழி:- சரி! ஊரைப்பற்றிக்கூறுவதுபோலத் தங்கள் காதலை வெளியிடட்டுமா?

தலைவி:- ஊரைப்பற்றி —ஊரைப்பற்றி—கூறினால் ஊராருக்கும் நம்மைப்பற்றித் தெரிந்து விட்டதா? — ஆ!...இந்த எண்

ணத்தையே விட்டுவிட வேண்டும் என்று நினைக்கக்கூடும்.

தோழி:- அன்னையைப்பற்றி!...

தலைவி:- அதுவும் கூடாது! என் தாயைப்பற்றிப் புகழ்ந்து பேசினால் தற்பெருமையாகக் கருதினாலும் கருதக்கூடும்.

தோழி:- பிறகு யாரைப்பற்றிக் கூறுவது?

தலைவி:- நான் கொண்ட காதலைப் பற்றிச் சொல்!

தோழி:- விந்தையாக இருக்கிறதே! ஊரையும் பேரையும் சொல்லாமல்...!

தலைவி:- என் காதலை மட்டும் வெளியிட வேண்டும். நீ என்னைத் தெரிந்துகொள்ளாதவள் போலவும், அவர் என்னைக் காதலிப்பதை அறிந்துகொள்ளாததுபோலவும், பொதுவாகக் கூறவேண்டும். அதாவது யாரோ ஒருத்தி உன்னை நினைத்துத் தூங்காமல் ஏங்குவதையும் கண்ணீர்விட்டுக் கலங்குவதையும் கண்டேன் என்று சொல்ல வேண்டும். மறந்திருந்தாலும் நீ இவ்வாறு சொன்னதும் நினைவு வந்துவிடும். நம்மைக் காண்பதற்கு அவர் இங்கே வரக்கூடும்.

இவ்விதம் தலைவி தோழிக்குக் கூறுகிறாள். தலைவியின் பெருநாணத்தையும் பெருவேட்கையையும் என்னென்பது.

என்னை உரையல்!
என்பேர் உரையல்!
ஊர் உரையல்!

அன்னையும் இன்னள் என உரையல்!

இவையெல்லாமே சொல்லாமல் இருப்பதுடன், என் காதலைப்பற்றி மட்டும் மறைமுகமாகத் தெளிவுபடுத்து — என்று தலைவி கூறும் விதம் நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது! இது அல்லவோ கவி! படம்பிடித்துக் காட்டுவதுபோல் அல்லவா இருக்கிறது! இது போன்ற காதற்காட்சிகளைத் தமிழ் இலக்கியங்களிலன்றி வேறு எங்கு காணமுடியும்! இந்தக் கற்பனை கலந்த காதற்காட்சியை, முத்தொள்ளாயிரத்திலே காணலாம். நமது உள்ளத்தைத் தொடும் அப்பாடல் இதோ:—

என்னை உரையல் என்பேர் உரையல் ஊர்
உரையல்
அன்னையும் இன்னள் எனஉரையல்-பின்னையும்
தன்படா யானைத் தமிழ்நர் பெருமாற்(கு)என்
கண்படா வாறே உரை. ★

9-ம் பக்கத் தொடர்ச்சி

"காட்டுக்குள் ஓடி மறைந்த பின்பும் சிலர் என்னைத் தேடிவந்து பிடித்து அவமானப் படுத்தியது மல்லாமல், தாக்கிவிட்டும் சென்றார்கள். மூன்று நாள் பயங்கரமான காட்டினுள் உண்ண உணவின்றிப் பதுங்கிக் கிடந்தேன். பசியின் கொடுமையால் மறுநாள் காலையில் காட்டைவிட்டு வெளியேறி ரோட்டுக் கருகாமையில் வந்தேன். அச்சமயம் அவ்வழியே ஒரு வான் வந்தது. அதில் என்னை ஏறிக்கொள்ளச் சொன்னார்கள். அதன்படி நானும் ஏறினேன். அவர்களால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன்".

மூன்று நாட்கள், பசியினையும், கானகத்தைப்பற்றிய பயத்தையும் பொருட்படுத்தாமல், அந்த நாசகாலர்களிடமிருந்து தப்பினால் போதும் என்ற எண்ணத்தோடு அலைந்து திரிந்திருக்கிறார்.

அங்கும் அவரைத் தேடிப் பிடித்து அவமானப்படுத்தியிருக்கிறார்கள்.

அது நாடா, அன்றி நச்சரவுகளின் உறைவிடமா, உயிருக்குப் பாதுகாப்பில்லை, ஓடி ஒளிந்தாலும் தப்பமுடியாது, அங்கமிழந்தாலும் அவமானத்திற்கு ஆளாக்கப்பட்டாலும், சிரமிழந்தாலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டாலும் கேட்க நாதியில்லை என்ற நிலை எங்கே காணமுடியும் இதைப்போல், என்று மனம் வெதும்பிக் கேட்டிடுவர், மனிதாபிமானிகள் மட்டுமல்ல, மனச் சான்றையே அடகு வைத்துவிட்ட கன்மனத்தார்கூட!

நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட—உலகத்தின் கண்களையும் கவனத்தையும் ஈர்க்கின்ற நிகழ்ச்சி இது!

ஆனால், உலகத்தின் கண்களுக்குக் காட்டப்படாமல் மறைந்து கிடக்கிற,—மறைக்கப்பட்டிருக்கிற சோகக்காட்சிகள் ஏராளம்!

வழக்கிலே குறிப்பிடப்பட்ட இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முதல் நாள் — கடந்த மே திங்கள் 26-ம் நாள் — பொலன் நருவா என்ற நகரத்தில் நடைபெற்ற மற்றோர் நிகழ்ச்சி, இதோ:—

"ஏறக் குறைய மூவாயிரம் சிங்களவர்கள் ஒரு கூட்டமாகவந்து, இரயில் நிலயத்திற்குப் போய்க்கொண்டிருந்த ஒரு தமிழரைப் பிடித்து, அடித்துத் துன்புறுத்தினார்கள். அவர் இரயில் நிலையத்தை அடையும்வரை அவரை அடித்துக் கொண்டே இருந்தார்கள். துப்பாக்கியைப் பயன்படுத்திக் கூட்டத்தைக் கலைப்பதற்கான தைரியம் போலீசாருக்கு வரவில்லை. அவர்களைச் சுடுவதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லையென்று கூறி, இராணுவமும் தலையிடாமலே இருந்துவிட்டது"

இந்தப் படப்பிடிப்பைத் தந்திருப்பவர் ஒரு சிங்களவர் விட்டாச்சி என்பார் — "சிலோன் அப்சர்வர்" என்னும் பத்திரிகையின் ஆசிரியர்.

நாடு அப்போது காடாயிற்று. ஆனால் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்திட வேண்டிய போலீசாரோ, ஒதுங்கி நின்றனர்,— வேடிக்கை பார்த்தனர்.

இதோ, அதே ஆசிரியர் தரும் இன்னொரு மற்றோர் படப்பிடிப்பு:—

"கொழும்பில், பாராளுமன்றத்திற்கு மிக அருகாமையிலேயே, தமிழர்கள் தாக்கப்பட்டபோது, போலிசார் வேறு பக்கம் திரும்பிக்கொண்டனர். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் துளியும் முயலவில்லை. தமிழர் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் ஆடைகளை, குண்டர்கள் களைந்து, அவரை நடுத்தெருவில் ஓடவிட்டுத் துரத்தியடித்தபோதும் போலிசார் பார்த்துக்கொண்டுதானிருந்தார்கள், சிறுவிரலையும் அசைக்கவில்லை. தலையிடக் கூடாது என்று தங்களுக்கு உத்தரவு அளிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் காரணம் கூறினார்கள்." ❋

எதிர்பாருங்கள்!

தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள்

அளிக்கும்

"காதல் பரிசு"

என்ற தொடர் கதை விரைவில் இடம்பெறும்.

'மீன்கள்'

[கா. வேழவேந்தன்]

எப்பொழுதோ ஒரு முறை வெள்ளத்தைக் கொண்டுவரும் காட்டாறு அது. நீராடை உடுக்கும் நேரங்களில் தவிர, மற்றப்படி நிர்வாணமாகவே மணல் அணுக்களால் ஆன தன் உடலைக் காட்டிக்கொண்டிருந்தாள் அந்த ஆற்று மங்கை!

அதன் இடையே ஒரு சிறு நீர் நிலை. இளிச்சவாயர்களின் உள்ளத்தைப்போல அதிக ஆழமில்லாமல் காணப்பட்டது. அதில் தேங்கியிருந்த நீர் அலைக்கரங்களை எழுப்பி, ஓசைப்படுத்தி ஆரவாரம் செய்வதில்லை. அமைதி நிறைந்த தெருப்பள்ளிக்கூட மாணவனைப் போல அந்த 'மடு' காணப்பட்டது. வெள்ளை மணலைப் படுக்கையாகக் கொண்ட அந்த நீரை, பசுமை நிறமாக்கிக் காட்டிக் கொண்டிருந்தன அதிலே வளர்ந்திருந்த பாசிகள். வசிப்பதற்கு வசதி தேடித்தந்த அந்தப் பாசிகளையே வயிற்றைக் கழுவும் உணவாகவும்கொண்டு ஒரு குடும்பமே காலத்தைக் கழித்துவந்தது. அதுதான் அந்தமடுவில் நெடுங்காலமாக வாழும் சேல்மீன்களின் கூட்டம். நீரால் சூழ்ந்த அந்த உலகத்தில் கேட்பாரற்றுக் கவலையின்றி வாழ்ந்து வந்தன அந்தக் கயல்கள்.

மாலை கடந்த பிறகு இரவு தொடங்கும். அந்த நேரத்தில் தான் வானப் பொந்தில் பதுங்கியிருக்கும் தாரகைகள் மெதுவாகத் தலையை வெளியே நீட்டும். கண்ணுக்கெட்டாத அந்த மின் பூச்சிகளை எட்டிப்பிடிப்பதுபோல சேல்மீன்கள் நீர் மட்டத்தைவிட்டு மேலே தாவும். ஆனால்நினைப்பதெல்லாம் நடந்துவிடுவதில்லையே!

அந்தக் கவலையற்ற மீன்களின் வாழ்க்கை இப்படியே அமைதியாகக் கழிந்து கொண்டிருந்தது. அன்று எங்கிருந்தோ அந்த மடுவுக்குப் புதுநீர் தவழ்ந்து வந்து விழுந்தது. ஆமாம், மேற்கே எங்கோ முகில்கள் கூடி அழுதிருக்கவேண்டும்; அவற்றின் கண்ணீர்தான் சிறு வெள்ளமாக மாறி அந்த மடுவில் வந்துவிழுந்தது. வந்த புதுவெள்ளம் நீரை மட்டும் கொண்டுவரவில்லை. ஏதேதோ காட்டுப் பொருள்களையெல்லாம் அடித்துக்கொண்டு வந்து சேர்த்தது. பொங்கிவரும் புனல் அல்லவா?

நீர் தெளிந்ததும் சேல்மீன்கள் தங்கள் உலகத்தைச் சுற்றிப் பார்த்துவரச் சென்றன. தங்களைப் போன்ற வேறு சில உருவங்கள் வந்து சேர்ந்துள்ளதைக் கண்ணுற்றன. பாவம்! அவைகளுக்கு நல்ல உள்ளம் இருந்தது. 'தேளி மீன்கள்' எண்ணிக்கையிலும் உருவத்திலும் மிகக் குறைந்தே இருந்தாலும் அவற்றை எதிர்த்து அழிக்க முனையவில்லை. அதற்குப் பதில் தாராள உள்ளத்துடன் புதிய மீன்களுக்கு வரவேற்புக் கொடுத்தன. தாம் நாளும் நாளும் உண்டுவந்த பாசி முதலிய உணவுப் பொருள்களை அவற்றிற்குப் பங்கிட்டளித்தன. ஏன்? வந்த மீன்களை விருந்தினராக ஏற்றுப் போற்றிவந்தன சேல் மீன்கள்.

காலம் நாட்களைத் தின்றது! உருவத்திலும் எண்ணிக்கையிலும் குறைந்திருந்த தேளிமீன்கள் நாளாவட்டத்தில் சேல் மீன்களிடம் தம் உண்மை உருவைக் காட்டத் தொடங்கின; மடுவில் கிடைத்த உணவுப் பொருள்களையெல்லாம் தாமே தின்று கொழுத்தன; சாதுவான சேல்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. அவை தேளிகளின் கூரிய கொடுக்குகளுக்கு அஞ்சி, ஒதுக்குப்புறங்களில் வாழத் தொடங்கின. வளமான பகுதிகளைத் தேளி மீன்கள் கைப்பற்றிக்கொண்டதால் நாள் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்தாலும் வேண்டிய அளவு உணவு கிடைக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் மடுவேறு வற்றத் தொடங்கியது. ஆத்திரக்காரன் கதிரவன் கடல் நீரைக் குடிப்பதுபோன்று, அந்த மடு நீரையும் ஒளித்தூதர்களை அனுப்பி வாரிக்கொண்டு போனான். அதனால் நீர் பரவியிருந்த அந்த மடுவில் இடை இடையே திட்டுகள் தோன்றத் தொடங்கின. கொஞ்ச நாட்களுக்குள் அந்த அகன்ற மடு நான்கு சிறிய குட்டைகளாகப் பிரிந்தன. ஒன்றாகவே வாழ்ந்து வந்த சேல் மீன்கள் சிதறிப்போய் நான்கு குட்டைகளிலும் சிர்குலைந்து வாழத் தொடங்கின. ஆனால் வளர்ச்சியும் வலிவும் பெற்றிருந்த தேளிகள் நான்கிலும் விரவிப் பிரிந்தன. அவற்றின் ஆதிக்கம் அளவைக்கடந்து சென்றது. வலிவும் பொலிவும் அற்ற சேல்களைத் தம் நச்சுக் கொடுக்குகளால் துன்புறுத்திக்கொண்டே இருந்தன அவை. தீராத தொல்லைகளைத் தினம் தினம் அனுபவிக்க நேர்ந்த சேல்கள் தாம் உயிரோடு வாழ, எங்கேனும் நீர்நிலை கிடைக்குமா என்று ஏங்கித் தவித்தன; சில, பக்கத்தில் ஏதேனும் பள்ளம் இருக்கும் என்று நம்பி குதித்தும் விட்டன. அவற்றிலே சில சிறிய பள்ளங்களை அடைந்து எப்படியோ வாழ்ந்தன; சில வாழ்வுக்கு வழிதேடப்போய் மரண வாயிலிலே புகுந்தன.

ஆனாலும் அவற்றில் பல நம்மால் வேறென்ன செய்ய இயலும் என்று இன்னும் தனித்தனியே குட்டைகளில் வாழத்தான் செய்கின்றன. பாவம்! வேறு வேறு திக்கிலே பிரிந்துவிட்ட அந்தப் பரிதாபத்திற்குரிய மீன்களை மீண்டும் இணைப்பார் யார்! அவற்றின் பழைய வரலாற்றை நினைவூட்டுவார் யார்?

இன்றைய தென்னகத்தில் சேல்களாகத் திராவிடமும் தேளிகளாக வடநாட்டாதிக்கமும் காட்சி தருகின்றன. ★

கோலாகலமான விழா — தீப அலங்காரங்கள்—திகைத்திட வைத்திடும் ஆடம்பரங்கள்—முப்படையும் நடத்திய அணிவகுப்புகள் — இத்தனையையும் கண்டது நாடு, இந்தக் குடியரசு தினத்தன்று—ஜனவரி 26ல்!

உலகின் பற்பல மூலைகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து மலைமலையாகக் குவிந்தவண்ணமிருந்தன. அமெரிக்காவும் ரஷ்யாவும், இங்கிலாந்தும் பிரான்சும், இலங்கையும் பாகிஸ்தானும், இன்னபிற நாடுகளும் அனுப்பியிருக்கிற வாழ்த்துச் செய்திகள், ஆசிமொழிகள், பாராட்டு உரைகள், இவையனைத்தும் ஆட்சியாளர்களுக்கேகூட ஓரளவு அஜீரணத்தை உண்டாக்கியிருக்கக் கூடும்!

'பாரத'த்தினையும், அதன் பண்பாட்டினையும், அது பெற்றிருக்கிற 'வளர்ச்சி'யையும், பெறவிருக்கின்ற மேம்பாட்டையும் குறித்து, பாராட்டுதலைத்தெரிவித்த செய்திகள் அநேகம்!

புதியதோர் பாரதத்தை உருவாக்கி வருபவர், அதன் மூலகர்த்தா, என்று பாராட்டப்படுகிற பண்டித நேருவைப் பாராட்டி, அவரது தொண்டினையும் உள்ளத்தினையும் போற்றிப் புகழ்ந்து, "வாழ்க வாழ்க" என்று வாழ்த்துக் கூறுகின்ற செய்திகள் அனந்தம்!

குடியரசுதினம், இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே முக்கியமானதொரு நாள், எவரும் மறுத்திடவில்லை!

அந்த நாளில், பாரதத்தையும் அதனை நடத்திச் செல்லுகிற பண்டிதரையும பாராட்டி வாழ்த்துச் செய்திகள், வந்து குவிதலும் இயல்பு—வியப்பில்லை இதிலும்!

அந்தக் கோலாகலமான விழாவிலே, நாங்கள் இதை இதைச் சாதித்தோம், இந்தத் துணைக் கண்டத்துமக்களுக்கு இன்னின்ன நன்மைகளைச் செய்தோம் என்று பேசியும், படமெடுத்துக்காட்டியும், ஆட்சியாளர்கள் மக்களுக்கு விளக்கினார்கள் ஆங்கங்கே! அதிலும் வியப்பில்லை, நடந்திடக்கூடாத தொன்றுமில்லை, சாதனைகளை எடுத்தியம்பும் வேளையில் கொஞ்சம் கைச்சரக்கையும் கலந்து கொண்டார்கள் என்பதைத்தவிர!

சி. என். ஏ.

பாரதத்தைப் பாரீர், அது பெற்றுள்ள வளர்ச்சியினைக் காணீர், அது பெறப்போகின்ற உயர்வினை உணர்வீர் என்ற காலட்சேபத்தோடு நின்றிருந்தால், வியப்போ வேதனையோ தோன்றியிருக்க நியாயமில்லை எவருக்கும்!

மாறாக, அதே தினத்தில் மற்றும் பல வேண்டுகோள்களையும், நயம் கலந்த தொனியில் சிற்சில அறிவிப்புகளையும் ஆணைகளையும் விடுக்கின்றனர் — அதிலேதான் நமக்குமட்டுமல்ல, நாட்டுமக்களனைவருக்கும் வியப்பும் வேதனையும், ஏற்படுகின்றது! வினாக் குறியும் எழுகின்றது!

பாரதம் வளர்ந்திருக்கிறது பாரீர் என்று பக்ரா நங்கலையும், தாமோதர் திட்டத்தையும் படமெடுத்துக்காட்டி, கோலாகலமான விழாவில் இந்த நாட்டு மக்களனைவரையும் பங்கு பெற அழைக்கின்ற அதே ஆட்சியாளர்கள், "நண்பரீர்! உண்டி சுருக்கிடுக, செலவு குறைந்திடட்டும், சிக்கனம் பரவிடட்டும்" என்றோர் குரலையும் எழுப்பினார்கள்—அதுதான் எவருக்கும் புரியவில்லை!

அலங்காரங்களும் அணிவகுப்புகளும் ஓர்புறம், — ஐந்தாண்டுத் திட்டத்தினைக் காப்பாற்றிடும் அரும்பணிக்கு உதவிடுவீர், உமக்கிருக்கின்ற தேவைகளைக் குறைத்திடுவீர், என்ற உருக்கமான அழைப்பு ஓர்புறம்! படைபலம் பாரீர் என்று காட்டப்படுகிறது ஓர்புறத்தில் — பாரதத்தீரே, நமக்கிருக்கிற தொல்லைகள் இன்னின்ன, பொருளாதாரப் பிரச்சினைகள் இவையிவை, என்று விளக்கம் தரப்படுகிறது மற்றோர் புறத்தில்!

கோலாகலமான விழா நடைபெறுகிறது — அதிலே கும்பி காய்வோருக்கு 'காலட்சேபமும்' நடத்தப்படுகிறது!

பற்பல தொல்லை துயரங்கள், வேட்கை விரக்திகள், வெறுப்பு வேதனைகள், இவற்றிற்கிடையே அகப்பட்டுத் தத்தளிக்கின்ற ஆட்சியாளர்களுக்கு, வேண்டுமானால் இத்தகைய விழாக்கள் தேவைப்படலாம் — அவர்களது உள்ளத்திற்குப் புத்துணர்ச்சியூட்டிட இன்றியமையாதவையாக இருக்கக்கூடும்.

இதுபோன்ற விழா நாட்களில், தாம் கொண்டிருக்கும் குறிக்கோளையும், அதை அடைவதற்கான வழிவகைகளையும், அந்தப் பாதையில் தாங்கள் நடந்த வரையில் அடைந்த வெற்றி தோல்விகளையும், அவற்றிற்கான காரணங்களையும், ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்த்திடக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

அந்தக் கடப்பாட்டினை உணர்ந்து அவர்கள் நடந்திடுவரேல், இதுபோன்ற விழாக்களையும், கோலாகலங்களையும் அவர்கள் நடத்துவதிலே தவறில்லை — தேவைதான் அவை, என்று எவரும் மனப்பூர்வமாக ஆதரித்திடுவர்.

மாறாக, கோலாகலங்களைக் கண்டு, வாண வேடிக்கைகளையும் தீப அலங்காரங்களையும் பார்த்து, நாடே குதூகலத்தில் ஆழ்ந்திருக்கிறது, நாட்டு மக்களுக்கு எவ்விதக் குறையும் இருக்கவில்லை, என்று ஆட்சியாளர்கள் தப்புக் கணக்குப் போடுவாரானால், அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் கரங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிற இந்தத் துணைக்கண்டத்திற்கே குந்தகம் நேர்ந்துவிடும்.

விழாக்களும் வேடிக்கைகளும் எவ்வளவு திறம்பட நடத்திக் காட்டப் பெற்றாலும், நாம் ஓர் மகத்தான உண்மையை, அது எவ்வளவு கசப்பானதாயினும் மறந்துவிட முடியாது.

விழாக்களையும், அவற்றிலே பொழியப்படுகின்ற கோலாகலங்களையும் குதூகலத்தையும் கண்டு, ஆட்சிப்பீடத்திலே இருப்பவர்கள் மகிழ்கிறார்களே தவிர, சாதாரண மக்களல்ல!

அவர்கள் அந்த விழாக்களைப் பற்றிக் கொண்டிருக்கிற கருத்து வேறு.

சுகபோகங்களிலே புரளும் ஆட்சியாளர் சிலர், தங்கள் மனங்குளிர நடத்துகின்ற நாடகம் இது என்றுதான் கருதுகின்றனரே தவிர, இந்த விழாக்களில் ஆவலையோ ஆர்வத்தினையோ அவர்கள் காட்டுவதில்லை. இத்தகைய விழாக்கள் அவர்தம் உள்ளத்திலே மகிழ்ச்சியை ஊட்டவுமில்லை.

நாட்டு மக்களை ஏமாற்றிட இத்தகையதோர் நாடகமா என்று மனங்குமுறிக் கேட்போரும், ஆட்சியிலே மலிந்து கிடக்கின்ற அவல நிலையினை, மானக்கேடான நிகழ்ச்சிகளை மூடி மறைத்திடுவதற்கல்லவா இந்தக் காட்சிகளெல்லாம் காட்டப்படுகின்றன என்று கேலியும் கிண்டலும் கலந்த குரலில் பேசுவோரும் ஏராளம்.

மக்களுள்ளத்திலே பொங்கி எழுகின்ற மகிழ்ச்சி, அவர்தம் விழிகள் காட்டும் உவகை, இதழ்களிலே மிளிரும் புன்னகை, இதயங்களில் எழுகின்ற இன்பநாதம் இவையன்றோ மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதற்கான அறிகுறிகள்—கோலாகலமான விழாக்களா குறைவற்ற வாழ்வினைக் காட்டிட முடியும் — என்று எடுத்தியம்புவோர் உளர், பல்லாயிரக் கணக்கில்!

உண்ண உணவு, உறைந்திட ஓர் இல்லம்; உழைத்திட வாய்ப்புகள், உழைப்பினுக்கேற்ற ஊதியம் பெற்றிட வழி வகைகள், சுருங்கச் சொல்லின அவர்கள் வாழ்க்கைத்தரத்திலே உயர்வு— ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில், என்பார்களே, அந்த நிலை — இவைதாம் மக்களுள்ளத்திலே மகிழ்ச்சியூட்ட முடியுமே தவிர, முப்படையின் அணிவகுப்புகளோ, ஆகா, நாடு இவ்வளவு வளர்ந்துவிட்டது என்று ஆட்சியாளர்கள் அவ்வப்போது நடத்துகின்ற காலட்சேபங்களோ, அல்ல!

குடியரசு தினத்தன்று நடத்தப்பெற்ற கோலாகலமெதுவும் மக்களுள்ளத்திலே குதூகலத்தை உண்டாக்கவில்லை என்ற உண்மையினை, உலகின் பற்பல மூலைகளிலிருந்து வந்து குவிந்திருக்கிற வாழ்த்துச் செய்திகளைக் கண்டு மதிமயங்கி நிற்கின்றோரும் மறந்துவிட முடியாது— கூடாது.

குடியரசு தினம் போன்ற விழா நாட்களில் மக்களைப் போற்றிப் புகழ்வதாலோ, அவர்களுக்கென்று ஆட்சியாளர்கள் செய்திருக்கின்ற சிற்சிறு நன்மைகளைப் பட்டியல் தயாரித்து வெளியிடுவதாலோ மக்களுள்ளத்திலே குதூகலத்தை ஏற்படுத்திவிட முடியாது. அரசாங்கமும் கடமையைச் செய்ததாக ஆகாது.

மாறாக, ஆட்சியாளர்களாலே செய்யப்படாத, ஆனால் செய்யப்படவேண்டிய, பணிகள் — துவங்கப்பட்டு முற்றுப்பெறாமல் நிற்கின்ற பணிகள் — நிறைபடச் செய்யப்படாத காரியங்கள் — இவையனைத்தையும் சிந்தித்து, சீர்தூக்கி, காரியங்களிலே குறைபாடுகள் இருந்திடக் காரணமென்ன, அவற்றை நீக்கிடும் வழிவகைகள் எவை என்று ஆராய்ந்து, மிக மும்முரமாக, ஆனால் எச்சரிக்கையோடு அந்தப் பணிகளிலே இறங்குவதற்கான 'கால்கோள்' விழாக்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும், குடியரசு தினம்போன்ற விழாக்கள்.

மக்கள் நலத்திலே ஆட்சியாளர்களுக்கு அக்கறை இருந்தால் மட்டுமே போதுமென்று பொருளல்ல! அங்ஙனம் அவர்கள் அக்கறை காட்டுகின்றார்கள் என்பதனை மக்கள் உணரும்படி செய்திட வேண்டும்—நாடு உயர்வதற்காகச் செய்யப்படும் பணிகளில், அவை, இவையிவை என்று ஆராய்ந்துபார்க்கின்ற மகத்தான பொறுப்பில், மக்களுக்கும் பங்கு அளிக்கப்பட வேண்டும்!

அப்போதுதான் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளுகின்ற நல்ல காரியங்களுக்கு மக்களது ஆதரவு கிடைக்கும். அத்தகைய ஆதரவு கிடைக்கவில்லையெனில் ஆட்சியாளர்கள் தீட்டுகிற திட்டங்களாலே பலனில்லை!

மக்களை எந்த அளவு தாழ்வாக இந்த ஆட்சியாளர்கள் கருதிவந்திருக்கின்றனர் என்பதை அவர்கள் உணர்ந்தாகவேண்டும்— திருந்தியாக வேண்டும்!

மக்கள் கரத்திலே புள்ளிவிவரங்களும், திட்டங்களை விளக்குகின்ற பற்பல வெளியீடுகளும் இருந்திடவில்லை —உண்மைதான்!

ஆயினும் அவர்களிடத்தில் போற்றத் தகுந்ததோர் பொற்பேழை—பொது அறிவு — அனுபவ முதிர்ச்சி இருக்கிறது — இதுவரை ஆட்சியாளர்களாலே பயன்படுத்திடப்படாமல்!

அவர்களிலே பெரும்பகுதி எழுத்தறிவற்றவர்கள் என்பதாலே, அவர்கள் ஏதுமறியார்,

னதையும் புரிந்துகொள்ளும் திறனற்றோர், என்று எண்ணிவிட முடியாது.

அவர்களிடத்திலே நிரம்பியிருக்கிற அறிவுச் செல்வம், எதற்கும் பயன்படாமல் சீரழிந்திட, இந்த ஆட்சியாளர்கள் விட்டுவைக்கக் கூடாது.

ஆட்சிப் பொறுப்பிலும், பற்பல அலுவலகங்களிலும் இருப்போர், அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டியன பற்பல இருக்கின்றன எனினும், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவையும் ஏராளம்.

ஒருவருக்கொருவர் விளக்கம் தந்து, ஆட்சிப் பொறுப்பிலே இருப்போர் கூறுகின்ற உண்மைகளை மக்களும், மக்கள் தருகின்ற யோசனைகளை ஆட்சிப் பொறுப்பிலிருப்போரும் ஏற்றுக்கொண்டு, இருசாராருக்குமிடையே ஒரு கூட்டுறவு ஏற்பட்டாலொழிய, ஆட்சியாளர் தீட்டுகின்ற எந்தத் திட்டமும் பலனளிக்காது.

இந்த உண்மைகளையெல்லாம், குடியரசு தினம் போன்ற விழா நாட்களில், ஆட்சிப் பொறுப்பிலே இருப்போர் உணர்ந்து கொண்டாலொழிய, அந்த நாட்களிலே நடத்தப் பெறுகின்ற கோலாகலங்களனைத்தும் விழலுக்கிறைத்த நீராகும்—எந்தப் பயனையும் அளிக்காது!

ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே போதுமான அளவு தொடர்பு இல்லையென்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டிப்பது நாம் மட்டுமல்ல!

இதோ ஒருவர், சாதாரணமானவரல்ல, திட்டக்குழுவிலேயே இடம் பெற்றிருந்தவர், பொருளாதார நிபுணர், காட்கில் என்பவர் தருகின்ற கருத்துரை:-

"ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதார நிலையை நன்றாக உணர்ந்துகொள்ளவில்லை என்பதுமட்டுமல்ல, பெரிய பெரிய திட்டங்களைப் பற்றிய அறிவிப்புகளும், அவைபற்றி விரிவான உரைகளும் மக்களுள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும், என்று ஒரு குருட்டு நம்பிக்கையிலே இருக்கிறார்கள்.........டெல்லியின் ஏகாதிபத்திய வரலாறு, அங்கே நடத்தப்பெற்ற ஆடம்பரங்கள், திகழ்கின்ற மாடமாளிகைகள், மன்னர்களின் கோலாகலமான வாழ்வு, சமுதாயத்தின்மீது அவர்கள் செலுத்திய கண்ணோட்டம்...இவையனைத்தும் இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டின் நிலையை நன்றாக உணர்ந்து கொள்வதற்கு, மாபெரும் தடைகளாக இருக்கின்றன"

நம்முடைய விருப்பமெல்லாம், நமது ஆட்சியாளர்கள் குடியரசு தினத்தையும் மற்றோர் ஆடம்பர விழாவாக ஆக்கிக்கொள்ளக் கூடாது என்பதுதான். நாட்டின் நிலையினை உணர்ந்துகொள்வதற்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பாகப் பயன்படுத்திட வேண்டும்.

இதை நாம் கூறும்போது காங்கிரசுக் கூடாரத்திலே இருக்கின்ற 'சில்லறைத் தெய்வங்கள்' நம்மைக்கண்டு சீறுமென்பதையும், அவர்கள் இந்த விழாக்களை எந்தக் கோணத்திலே பார்க்கிறார்கள் என்பதனையும் நாமறிவோம்.

அலங்காரமான விழாக்கள், ஆடம்பரங்கள், அணிவகுப்புகள் இத்தனையும் மக்கள் உள்ளத்திலே குதூகலத்தை ஏற்படுத்தும்; அந்தக் குதூகலம் தேர்தல் காலத்திலே கைகொடுக்கும், என்று இந்தக் கணக்கைப் போடுகிறார்கள், வேறல்ல!

ஆனால் விழாக்களைக் காண வருகிற மக்கள், அந்த விழாக்களிலே இருக்கின்ற ஆடம்பரங்களையும், தத்தம்வீடுகளிலே இருக்கின்ற அவல நிலையினையும் ஒருசேர எண்ணி, ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் என்பதனையும், அங்ஙனம் ஒப்பிட்டுப் பார்ப்பதாலே அவர்தம் உள்ளத்தில் எத்தகைய குமுறல் எழக்கூடும்? அந்தக் குமுறலின் முடிவு என்ன ஆகும் என்பதனையும், என்ன காரணத்தாலோ நமது ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க மறுக்கின்றனர்!

இங்ஙனம் ஒப்பிட்டுப் பார்த்ததாலே மக்களுள்ளத்திலே ஏற்பட்ட கொந்தளிப்பின் காரணமாக இதுவரை தோன்றியிருக்கிற புரட்சிகள் ஏராளம்!

அத்தகையதோர் ஆபத்தான சூழ்நிலையையா, ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் ஏற்படுத்த முயல்வது, குடியரசு தினம் போன்ற விழா நாள் ஆடம்பரங்களின் மூலம்?

லெனின் காட்டிய வழி!

புது ரஷியாவை எப்படி ஆக்குவது என்பதுபற்றி, 'இரண்டாவது இன்டர் நேஷனல்' வாதிகள் என்போர் யோசனை சொன்னார்கள். மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் என்று இரண்டு அமைக்க வேண்டும். ஆனால் மத்திய சர்க்காருக்கே, அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். ரஷியாவில், பல மொழிகள் பேசுவோரும், பல தேசிய இனங்களும் உண்டல்லவா? இவர்களையெல்லாம் பிணைத்து, ஒரே அதிகாரத்துக்குள் கொண்டுவர வேண்டுமென்றார்கள் இவர்கள். மாகாண அரசுகளுக்கு மொழிச் சுதந்திரம் வேண்டுமானாலும் கொடுத்து விடுவோம்! மற்ற அதிகாரங்களையெல்லாம் மத்திய சர்க்காருக்கே வைத்துக்கொள்வோம் என்கிறார்கள்!! அவர்களை அறியாமலேயே, ஒரு தேசிய இனம், இன்னொரு தேசிய இனத்தைச் சுரண்ட இடம் கொடுத்தார்கள். நாடு சிறு சிறு துண்டானால், பலமற்றுப் போகும்; அழிந்து நாசமாய்விடும் என்று கண்டும் தேசிய இனங்கள், சுரண்டலை நிரந்தரமாக்குவதற்குச் சொல்லின. போல்ஷிவிக் கட்சியின் தலைமையை லெனின் ஏற்றுக்கொண்ட பிறகு சொன்னார், "ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழவேண்டும்; அது அவர்களது பிறப்புரிமை. ஒரு பிரதேசத்தின் பெரும்பான்மையான மக்கள் விரும்பினால் பிரிந்துபோகலாம்" என்றும் விளக்கினார்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

படுத்தினேனே, அதைக் கவனித்திருந்தால், இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயக ரீதியான அமைப்பு என்று நான் சொல்லும்போதே, திராவிட கழகத்தில் அது இல்லை என்பது சொல்லாமலே விளங்கும். இந்த வித்தியாசம் தெரிந்தால் போதும்.

கேள்வி:- திராவிடர்கழகம் பார்ப்பனர்களை வெறுக்கிறதே —அதை நீங்கள் ஏற்றுகொள்கிறீர்களா?

சி. என். ஏ:- இதோ இருக்கும் நண்பர் நரசிம்மனைக் கேளுங்கள்! (சிரிப்பு)...நாங்கள் எதனையும் வெறுப்பவர்களல்ல. சில முறைகள் எங்களுக்குப் பிடித்திருப்பதால், அவைகளுக்கு மாறானவைகளை எதிர்க்கிறோம். திராவிட நாகரிகத்தின் மேம்பாடு தெரிவிக்கப்பட வேண்டுமென விரும்புகிறோம்—அதற்கு ஆரியமும், பார்ப்பனியமும் தடையாக இருப்பதால், அதைப்பற்றிப் பேசுகிறோம். பார்ப்பனியம் என்பதும், பார்ப்பனர் என்பதும் வேறுவேறு என்று நான் தீட்டிய 'ஆரியமாயை' எனும் நூலுக்குப் போட்ட தடையை எதிர்த்து, ஐகோர்ட்டில் அப்பீல் செய்தபோது, விசாரித்த நீதிபதியே சொல்லியுள்ளார்கள். பார்ப்பனிய முறைகளை அனுசரித்து நடக்கும் பார்ப்பனரல்லாதோர் ஏராளமாக இருக்கின்றனர். ஆகவே, சாதி பேதமற்ற சமுதாயத்தை நிறுவப் பாடுபடும் நாங்கள், பார்ப்பனியத்துடன் மோதவேண்டி ஏற்படுகிறது. அதனால், நாங்கள் பார்ப்பனர்களுக்கெல்லாம் விரோதிகள் என்று அர்த்தமல்ல; தவறாகக் கூறப்படுவதாகும்.

கேள்வி:- திராவிடநாடு என்று நீங்கள் கேட்பது, ஆந்திரர்களை உங்கள் பிடியில் சிக்கவைக்கும் திட்டம் என்று இங்கு கருதப்படுகிறது. விளக்கம் தருவீர்களா?

சி. என். ஏ:- தயவுசெய்து அக்கருத்தை உடனே மாற்றிக்கொள்ளுங்கள்! திராவிடநாடு என்று கேட்பதே, ஆதிக்கத் தளையை அறுத்தெறியத்தான். தமிழ்நாட்டையும் ஆந்திரத்தையும் இணைத்து ஒன்றாக ஆக்குவதற்காக நாங்கள் திராவிட நாடு கேட்கவில்லை. நாங்கள் திராவிடநாடு என்று சொல்வது, தென்னாட்டிலுள்ள நான்கு மொழி பேசும் வட்டாரங்களும் ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு கூட்டுப் பொறுப்புத்தான். திராவிடநாட்டில், ஆந்திரர்களுக்கு எசமானர்களாகத் தமிழர்கள் இருக்கமாட்டார்கள், ஆந்திரம் ஆந்திரர்களிடம் தானிருக்கும்; அதுபோல, தமிழகத்தைத் தமிழர்களே ஆள்வார்கள், கேரளத்தை மலையாளிகளும்—கன்னடத்தை கன்னடியர்களும் ஆள்வார்கள். இந்த நான்கு வட்டாரமும் சேர்ந்து ஒரு கூட்டை ஏற்படுத்திக்கொள்வதுதான், திராவிட நாடு. இவை நான்கும், வெவ்வேறு மொழிகளைப் பேசினாலும், யாவும் திராவிடத்தையும் திராவிடரையும் சேர்ந்தவை என்பதாலேயே, ஒற்றுமையுடன் விளங்குவது சாத்யமெனக் கருதுகிறோம். இதற்குச் சரிதமும், பழைய வரலாறும் நமக்குத் துணையிருக்கின்றன. அதோடு, இப்போதுள்ள அமைப்பில் நமது அரசுகள் எல்லாம் சாதாரண முனிசிபாலிடிகளைவிடக் கேவலமாக விளங்கும்படி செய்யப்பட்டு, ஒருவிதமான சர்வாதிகாரம் உருவாகி வருகிறது.

கேள்:- தமிழ் இராஜ்யம்வேண்டும் என்று சொல்லி ஒரு இயக்கம் உருவாகி வருகிறதாமே. அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

சி. என். ஏ:- ஆமாம்! சமீபத்தில் ஏற்பட்டுள்ள குரல் இது. இதை எழுப்புபவரின் அரசியல் வரலாற்றை வைத்துப் பார்த்தால் எந்தவித அபிப்பிராயமும் சொல்லாமலிருப்பதே நல்லது எனக் கருதுகிறேன்.

விளக்கம் கேட்டு, அனைவரும் மகிழ்ந்தனரென்பதை அவர்தம் முகங்களே காட்டிற்று! இன்னும் இரண்டொரு நாட்கள் தங்களுடன் தங்கியிருந்து, உரையாட வேண்டும் என்று எல்லோரும் வற்புறுத்தினர்!! ஏப்ரல் கடைசியில் வருவதாகச் சொன்னார், சி. என். ஏ.

விழாவை ஏற்பாடு செய்தவர்களையும், விழாவில் கலந்துகொண்டவர்களையும்; பத்திரிகைகள் சங்கக் கூட்டத்தில் கேள்விகேட்டு விடை பெற்றவர்களையும், ஆர்வமுள்ள மாணவர்களையும் கண்ட போது, விரைவில், அங்கே ஒரு தி. மு. க. உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஏனெனில், வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர், பட்டம் பெற்றவர்கள்—வக்கீல்கள் — சிறந்த வாலிபர்கள் — முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்—இப்போதுள்ள ஆட்சியின் போக்கில் மிகமிக அதிருப்தி கொண்டவர்கள்!!

சி. என். ஏ. பேசும்போது, டில்லி எப்படியெப்படி தனது ஆதிக்கத்தைப் பலப்படுத்தி வருகிறது என்பதை விளக்கியபோதும், அந்த ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டுமெனச் சொன்ன போதும், கூட்டத்தினரின் முகத்தில் புது ஒளி தென்பட்டது. கலைந்து போகும்போதுகூட, ஒவ்வொருவரும் "பாகவுந்தே" என்றுதான் பேசிக்கொண்டு சென்றார்கள்.

வரவேற்பு! விருந்து! அன்புரை! ஆனந்தம்! இவைகளையெல்லாம் காணக்காண, ஆந்திரம் பக்கம் அடியெடுத்துவைக்கும் வாய்ப்பு வெகு விரைவில் ஏற்படப்போகிறது எனும் நம்பிக்கை அதிகமாகிக்கொண்டே வந்தது. இப்போது நினைத்தாலும், பயணம் இனிக்கிறது! நம்பிக்கையும் அதிகமாகிறது!!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு திராவிடநாடு அச்சகத்தில்